# 1

# லூக்கா நற்செய்தி ஆசிரியர்




உரு 1.1 தூய லூக்கா

**ஆசிரியர் :** பிள்ளைகளே! இறைவன் எமக்கு விசேட ஆற்றல்களையும், திறமைகளையும் தந்திருக்கின்றார். இந்த ஆற்றல்கள் திறமைகளை வளர்த்து விருத்தி செய்து சமூகத்திற்கு ஏற்ற பிரஜையாக வாழ்வதே எமது கடமையாகும். சிறு வயதிலிருந்தே ஆசிரியராக வரவேண்டும் என்ற விருப்பம் எனக்கு இருந்தது. நன்றாகக் கற்பிக்க வேண்டும் என்று விரும்பினேன். நான் ஒரு ஆசிரியராகி, மாணவர்களுக்கு நல்லவற்றைச் சொல்லிக் கொடுக்க விரும்பினேன். எனவே நான் இப்போது ஆசிரியராக இருக்கின்றேன். கனிஸ்ரன் உமது எதிர்கால நோக்கம் என்னவென்று கூறுவீரா?

**கனிஸ்ரன்:** ரீச்சர் நான் எதிர்காலத்தில் ஒரு வைத்திய நிபுணராகி உதவியற்ற நோயாளிகளுக்கு உதவி செய்ய விரும்புகிறேன்.

**ஆசிரியர் :** மிகவும் நல்லது, நீர் உமது நோக்கத்தை அடைவதற்கு முயற்சிசெய்து கற்க வேண்டும். கிறிஸ்ரி வளர்ந்த பின் நீர் என்ன செய்யவேண்டும் என்று நினைக்கிறீர்?

**கிறிஸ்ரி :** நான் குருவானவராக வர விரும்புகிறேன். பீடப்பணியாளர் சபையில் சேர்ந்து குருவானவருக்கு உதவி செய்கிறேன். இவ்வாறு எல்லோருக்கும் சேவை செய்ய விரும்புகிறேன்.

**ஆசிரியர் :** நன்று மிக நல்லதொரு கருத்தை கிறிஸ்ரி தெரிவித்திருக்கிறார். அவரது விருப்பம் நிறைவேற நாம் செபிப்போம்.

**ஜோசப் :** ரீச்சர் நான் ஒரு எழுத்தாளராகி, எதிர்காலத்தில் நிறையப் புத்தகங்களை எழுத ஆசைப்படுகின்றேன்.

**ஆசிரியர் :** ஜோசப்! மனிதர்கள் மத்தியில் நல்ல விழுமியங்களை உருவாக்க உம்மால் முடியும். எழுத்தாளர் என்பவர் ஆற்றல் மிக்கவர். இன்று நான் ஆற்றலுள்ள ஒருவரைப்பற்றி உங்களுக்குக் கற்பிக்கப் போகிறேன்.

இவர் திறமையான எழுத்தாளர் என்பதை முழு உலகுமே ஏற்றுக் கொண்டுள்ளது.இவர்தான் தூய லூக்கா. இறைமகனாகிய இயேசுகிறிஸ்துவே இவரது எழுத்தாக்கத்தின் கருப்பொருள். உலக வரலாற்றில் முக்கிய இடம் பெறுபவராக இயேசுவைக் காட்டுகிறார்.

நமது மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையோடு தொடர்புடைய விபரங்களை மிகவும் ஒழுங்கு முறையாக தூய லூக்கா தமது நற்செய்தியில் விபரித்துக் கூறியுள்ளார். இது அறிவு நிறைந்த ஒருவரின் இலக்கிய ஆற்றலாகும். இந்நூலாசிரியர் திறமையான எழுத்தாளர் மட்டுமல்ல, வரலாற்று ஆசிரியரும் ஓவியரும் வைத்தியரும் ஆவார். நற்செய்தியை எழுதியவர்களுள் இவர் ஒருவரே பிற இனத்தவர் ஆவார். (இவர் யூத இனத்தவர் அல்லர்). இவரது நற்செய்தியில் அடங்கியுள்ள அநேக விபரங்கள் கேட்டு அறிந்தவைகள் ஆகும். இவர் அன்னை மரியாவிடமிருந்து விபரங்களைப் பெற்றுக்கொண்டார் என திருச்சபை மரபு கூறுகிறது.

தூய லூக்கா நற்செய்தியை மட்டுமல்ல, திருத்தூதர் பணிகள் என்ற நூலையும் எழுதியுள்ளார். இந்த இரண்டு நூல்களிலும் நூலாசிரியரது பெயர் குறிப்பிடப்படாவிடினும் அவற்றின் மொழியும், மொழி நடைகளும் கூர்ந்து கவனிக்கப்படுகையில் இவற்றை ஒரே எழுத்தாளரே எழுதியுள்ளார் என்பது

உறுதிப்படுத்தப்படுகின்றது. திருத்தூதர்களின் காலத்தில் கிறிஸ்தவராகிய இவர், கிரேக்க மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவராக இருந்தார்.

பழைய ஏற்பாட்டில் பலி செலுத்தும்போது எருது அல்லது காளையைப் பயன்படுத்தியதால் தூய லூக்கா நற்செய்தியின் அடையாளமாக எருது காணப்படுகிறது.

தூய லூக்கா மற்றொரு எழுத்தாளராகிய தூய பவுலின் நண்பர் என்பது திருத்தூதர் பணிகள் நூலில் மட்டுமல்லாது பவுல் எழுதிய திருமுகங்களிலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. பவுல் உரோமாபுரியில் சிறையிலிருந்தபோது, லூக்காவும் அவரோடு இருந்தார் என்பதற்கு கீழே காணப்படும் வேதாகமப் பகுதிகள் ஆதாரமாக அமைகின்றன.

''என்னுடன் லூக்கா மட்டுமே இருக்கிறார். மாற்கை உன்னுடன் கூட்டிவா. அவர் திருத்தொண்டில் எனக்கு மிகவும் பயனுள்ளவர்.''

(2 திமோத்தேயு 4 : 11)

''கிறிஸ்து இயேசுவின் பொருட்டு என் உடன் கைதியாயிருக்கின்ற எப்பப்பிரா, என் உடன் உழைப்பாளர்களான மாற்கு, அரிஸ்தர்க்கு, தேமா, லூக்கா ஆகியோர் உமக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்.''

(பிலமோன் 1 : 24)

''அன்பான மருத்துவர் லூக்காவும், தேமாவும் உங்களை வாழ்த்துகின்றனர்.''

(கொலோசையர் 4 : 14)

இரண்டாம் மூன்றாம் தூதுரைப் பயணங்களில் லூக்கா, பவுலுடன் பயணம் செய்துள்ளார். திருத்தூதர் பணிகள் நூலை எழுதிய தூய லூக்கா **'நாங்கள்', 'நாங்களும்'** என்று குறிப்பிடும் இடங்களில் அவரும் அந்தப் பயணங்களில் கலந்துகொண்டார் என்பதைக் காட்டுகின்றார்.

இக்காட்சியைப் பவுல் கண்டதும், நாங்கள் மாசிதோனியருக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று கடவுள் தீர்மானித்துள்ளார் என எண்ணி, அங்கு செல்ல வழி தேடினோம். பின்பு நாங்கள் துரோவாவிலிருந்து கப்பலேறிச் சமொத்திராக்கு தீவுக்கும், மறுநாள் நெயாப்பொலி நகருக்கும் நேராகச் சென்றோம்; அங்கிருந்து மாசிதோனியப் பகுதியின் முக்கிய நகரான பிலிப்பி சென்றோம். அது உரோமையரின் குடியேற்ற நகரம். அந்நகரில் சிலநாள்கள் தங்கியிருந்தோம். ஒரு நாள் நாங்கள் இறைவேண்டல் செய்யும் இடத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது குறி சொல்லும் ஆவியைத் தம்முள் கொண்ட அடிமைப்பெண் ஒருவர் எங்களுக்கு எதிரே வந்தார். அவர் குறி சொல்லி அதனால் தம்மை அடிமையாக வைத்திருப்பவர்களுக்கு மிகுதியான வருவாய் கிடைக்கச்செய்து வந்தார். அவர் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து, 'இவர்கள் உன்னத கடவுளின் பணியாளர்கள்; மீட்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கிறவர்கள்' என்று உரக்கக் கூறினார். பல நாள்கள் அவர் அவ்வாறு செய்து வந்தார். பவுல் எரிச்சல் கொண்டு அவர் பக்கம் திரும்பி, 'நீ இவரைவிட்டுப் போகுமாறு இயேசுகிறிஸ்துவின் பெயரால் உனக்குக் கட்டளையிடுகிறேன்' என்று அந்த ஆவியிடம் கூறினார். அந்நேரமே அது அவரைவிட்டுச் சென்று விட்டது.

(திப.16 : 10 - 18)

பவுலின் தூதுரைப் பயணங்களில் லூக்காவும் பங்குபற்றினார் என்பதற்கு திருத்தூதர் பணிகள் 21:1, 21:7, 21:12, 21:15 ஆகிய பகுதிகளை உதாரணங்களாகக் காட்டலாம்.

லூக்காவைப் போல் நற்செய்தியை அறிவிப்பதற்கு எங்களுடைய திறமைகளைப் பயன்படுத்த வேண்டும். இறைவன் தந்த அறிவினால் அவரைப் புகழ்வோம். எங்களுடைய எழுத்து ஆற்றல்களால் இறைவனின் வார்த்தையை அறிவிப்பதற்கு பலவகையான ஆக்கங்களை உருவாக்க முன்வருவோம். பாடசாலை சுவரொட்டி களிலும், ஏனைய தகவல் தொழினுட்ப சாதனங்களிலும் எமது ஆக்கங்களை வெளிப்படுத்துவோம். மற்றவர்களையும் ஊக்குவிப்போம். தூய லூக்கா நற்செய்தியை எழுதியதன் மூலம் முழு மனுக்குலத்திற்கும் ஆற்றிய நன்மையை மதித்து அதிலிருந்து கூடியளவு பயனை அடைய முயற்சிப்போம்.

**செயற்பாடு**

1. தூய லூக்காவைப் பற்றி ஆக்கம் ஒன்று எழுதுக.
2. உங்களுடைய ஆக்கத்தை கத்தோலிக்க பத்திரிகையின் சிறுவர் பகுதியில், பிரசுரிப்பதற்காக அனுப்புங்கள்.

**வாழ்க்கைக்கு**

நற்செய்தியின் தூதுவராக முயற்சியுங்கள்.

# 2

# லூக்கா நற்செய்தியின் பின்னணி

ஒரு திறமையான நூலாசிரியர் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற அதற்குத் தேவையான செய்திகளையும், நிகழ்வுகளையும் ஆராய்ந்து தொகுத்து வழங்குவார். பொதுவாக இவ்வகையில் உருவாக்கப்படும் நூல் திறமையான ஆக்கமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. திறமையான நூலாசிரியரான தூய லூக்காவும் நற்செய்தியை எழுதுகையில் தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இம்முறையைக் கையாண்டுள்ளார்.

எல்லா மக்களினதும் மீட்பைப் பற்றிப் பேசும் இவர், அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்காக தெரிந்தெடுத்த விடயங்களை மிகவும் திறமையாகவும், ஆக்கபூர்வமானதாகவும் முன்வைத்திருக்கின்றார் என்பது, அவரது நற்செய்தி நூலைப் படிக்கும்போது தெளிவாகிறது.

இயேசு பெற்றுத் தந்த மீட்பு தெரிந்தெடுக்கப்பட்ட இனமாகிய யூதர்களுக்கு மட்டுமல்ல, முழு மனித குலத்திற்கும் உரியது என்பதனை வெளிப்படுத்த, இயேசு வின் வாழ்க்கை அவரது போதனை, செயல்கள் பற்றிய விபரங்களை லூக்கா தெரிவு செய்துள்ளார். அதன்படி இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல, மனுக்குலம் முழுவதற்கும் மீட்பர் என்று வெளிப்படுத்துவதே லூக்கா தமது நற்செய்தியை எழுதியதன் நோக்கமாகும். இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்திக் காட்ட லூக்கா பல விடயங்களைப் பயன்படுத்திய விதம் கீழே தரப்பட்டுள்ளது.

1. தூய மத்தேயு இயேசுகிறிஸ்துவின் தலைமுறையை குலமுதுவர் ஆபிரகாமிலிருந்து ஆரம்பிக்கிறார். அவரே யூத இனத்தின் தொடக்கமானவர். ஆபிரகாமின் மகனும், தாவீதின் மகனுமான இயேசுகிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல் (மத்தேயு 1 : 1). ஆனால் லூக்கா நற்செய்தியில் முதல் மனிதனாகிய ஆதாமிலிருந்தே இயேசுவின் தலைமுறை ஆரம்பமாகிறது.

(லூக்கா 3 : 23 - 28)

2. இயேசுகிறிஸ்து பிறந்தபொழுது விண்ணகத்தூதர் பேரணி ''உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக''. என்று கடவுளைப் புகழ்ந்து பாடியது (லூக்கா 2 : 14). இங்கு உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உரித்தாகுக என்று கூறியதிலிருந்து இயேசு கிறிஸ்துவே அனைத்துலக மீட்பர் என வெளிப்படுத்தப்படுகின்றது.

3. மோசேயின் சட்டப்படி ஒவ்வொரு தலைச்சன் ஆண்குழந்தையும் இறைவனுக்கு ஆலயத்தில் அர்ப்பணிக்கப்பட வேண்டும். தூய யோசேப்பும், தூய அன்னை மரியாவும் குழந்தை இயேசுவை காணிக்கையாக்க ஜெருசலேம் ஆலயத்திற்கு கொண்டு வந்தனர். இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட மீட்பைக் காணுவதற்கு ஆசையாயிருந்த நேர்மையாளரும், இறைப்பற்றுடையவரும் இஸ்ரயேல் இறைவாக்கினருமான சிமியோன் குழந்தை இயேசுவைக் கையில் ஏந்திக் கொண்டு கடவுளைப் போற்றி ''மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்படுத்தின உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. இம்மீட்பே பிறவினத்தவருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி, இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை'' என்றார். இதனால் இயேசு முழு உலகிற்கும் ஒளியும் மீட்புமானார் என்பது தெளிவாகின்றது.

(லூக்கா 2 : 30 - 32)

4. ''எனது அயலான் யார்?'' என்று சட்ட அறிஞர் ஒருவர் (மோசேயின் சட்டத்தை விளக்குபவர்) ஆண்டவர் இயேசுவிடம் வினவினார். அதற்கு இயேசு பின்வரும் உவமையைக் கூறினார்.

திருச்சட்ட அறிஞர் ஒருவர் எழுந்து, அவரைச் சோதிக்கும் நோக்குடன் ''போதகரே நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார். அதற்கு இயேசு ''திருச்சட்ட நூலில் என்ன எழுதியிருக்கிறது? அதில் நீர் என்ன வாசிக்கிறீர்?'' என்று அவரிடம் கேட்டார். அவர் மறுமொழியாக '' உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்று எழுதியுள்ளது'' என்றார்.

இயேசு ''சரியாய்ச் சொன்னீர், அப்படியே செய்யும் அப்பொழுது வாழ்வீர் என்றார். அவர் தம்மை நேர்மையாளர் எனக் காட்ட விரும்பி ''எனக்கு அடுத்திருப்பவர் யார்?'' என்று இயேசுவிடம் கேட்டார். அதற்கு அவர் மறுமொழியாக கூறிய உவமை ''ஒருவர் எருசேலமிலிருந்து எரிகோவிற்குப் போகும்போது கள்வர் கையில் அகப்பட்டார். அவருடைய ஆடைகளை அவர்கள் உரிந்துக் கொண்டு, அவரை அடித்துக் குற்றுயிராக விட்டுப்போனார்கள். குரு ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார். அவர் அவரைக் கண்டதும் மறுபக்கமாக விலகிச் சென்றார். அவ்வாறே லேவியர் ஒருவரும் அவ்விடத்திற்கு வந்து அவரைக் கண்டதும் மறுபக்கமாய் விலகிச் சென்றார். ஆனால் அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர்மீது பரிவு கொண்டார். அவர் அவரை அணுகி காயங்களில் திராட்சை மதுவும் எண்ணையும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டு போய் அவரைக் கவனித்துக் கொண்டார்.

மறுநாள் இரு தெனாரியத்தை எடுத்து, சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து, 'இவரைக் கவனித்துக் கொள்ளும், இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்' என்றார். ''கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகின்றது?'' என்று இயேசு கேட்டார். அதற்குத் திருச்சட்ட அறிஞர், 'அவருக்கு இரக்கம் காட்டியவரே' என்றார். இயேசு 'நீரும் போய் அப்படியே செய்யும்' என்று கூறினார்.

(லூக்கா 10 : 25 - 37)

சமாரியர் என்போர் யூதர் அல்லாத பிறவினத்தார். நல்ல சமாரியனுடைய உவமையில் யூத இனத்தவரல்லாத பிறவினத்தவரான சமாரியர் மதிக்கப்படுகின்றனர்.

லூக்கா நற்செய்தி கி.பி 80 - 85 ற்குள் எழுதப்பட்டதாக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தூய லூக்கா எழுதிய நற்செய்தியினூடாக தனது நோக்கத்தை நிறைவேற்றியது போல, எமது வாழ்வின் இறுதி நோக்கம் இறைவனை நெருங்கிச் செல்வதே. இதனை விளங்கிக் கொண்டு அதற்கேற்ப வாழ வேண்டும். சிறு வயதிலிருந்தே நல்லநோக்கத்துடன் செயற்பட்டு, விவேகத்தோடு அந்த நோக்கத்தை அடைவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களினது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியும்.

இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் ஊடாக அனைத்துலகிற்கும் மீட்புக் கிடைத்தது. நாமும் நம் குடும்பத்துக்கும் பங்குக்கு மட்டுமன்றி எல்லோரின் நலனுக்காகவும் செயற்படுவோம்.

**செயற்பாடு**

1. தூய லூக்கா நற்செய்தியின் நோக்கத்தை மனனஞ் செய்து பயிற்சிப் புத்தகத்தில் எழுதுக.

2. தூய லூக்கா தம் நற்செய்தியில் அவரது நோக்கத்தை நிறைவேற்றினார் என்பதற்கு 2 உதாரணங்கள் தருக.

**வாழ்க்கைக்கு**

உங்கள் வாழ்க்கையின் நல்ல நோக்கம் எதுவென்று சிந்தித்து அதை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள்.

# 3

# லூக்கா நற்செய்தியின் வேறுபெயர்கள்

தூய லூக்கா நற்செய்தி
- செபத்தின் நற்செய்தி
- பிறவினத்தாரின் நற்செய்தி
- இரக்கத்தின் நற்செய்தி
- தூய ஆவியின் நற்செய்தி
- பெண்களின் நற்செய்தி
- ஏழைகளின் நற்செய்தி
- ஒடுக்கப்பட்டவர்களின் நற்செய்தி

தூய லூக்கா நற்செய்தி வெவ்வேறு பெயர்களால் அறிமுகப்படுத்தப் படுவதற்கான காரணங்கள் என்னவென்று ஆராய்ந்து பார்ப்போம்.

**1. செபத்தின் நற்செய்தி**

நற்செய்தியில் 'செபம்' பற்றிக் கூடுதலான அவதானம் காட்டியிருப்பதால் செபத்தின் நற்செய்தி என அறிமுகப்படுத்தப்படுகின்றது.

✝ ஆண்டவர் இயேசு திருமுழுக்குப் பெற்று, இறைவனிடம் வேண்டுவதில் ஈடுப்பட்டிருந்தபோது தூய ஆவி அவர்மீது புறா வடிவில் இறங்கினார்.

(லூக்கா 3 : 21)

✝ சீடர்களைத் தெரிவு செய்வதற்கு முன்பு இறைவனிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்.

(லூக்கா 6 : 12)

✝ இயேசு இறைவேண்டல் செய்வதைக் கண்டு, சீடர்களும் இறைவேண்டல் செய்யும் முறையைக் கற்றுத் தருமாறு வேண்டிக் கொண்டனர்.

(லூக்கா 11 : 1)

✝ மனந்தளராமல் இடைவிடாமல் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு நேர்மையற்ற நடுவரும் கைம்பெண்ணும் பற்றிய உவமையை இயேசு கூறினார்.

(லூக்கா 18 : 1-8)

**நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும் பற்றிய உவமை**

அவர்கள் மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு இயேசு ஓர் உவமை சொன்னார். ''ஒரு நகரில் நடுவர் ஒருவர் இருந்தார். அவர் கடவுளுக்கு அஞ்சி நடப்பதில்லை, மக்களையும் மதிப்பதில்லை, அந்நகரில் கைம்பெண் ஒருவரும் இருந்தார். அவர் நடுவரிடம் போய் 'என் எதிரியைத் தண்டித்து எனக்கு நீதி வழங்கும்' என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். நடுவரோ நெடுங்காலமாய் எதுவும் செய்ய விரும்பவில்லை, பின்பு அவர் 'நான் கடவுளுக்கு அஞ்சுவதில்லை, மக்களையும் மதிப்பதில்லை, என்றாலும் இக்கைம்பெண் எனக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பதால் நான் இவருக்கு நீதி வழங்குவேன். இல்லையானால் இவர் என் உயிரை வாங்கிக் கொண்டேயிருப்பார்' என்று தமக்குள்ளே சொல்லிக் கொண்டார்.'' பின் ஆண்டவர் அவர்களிடம் ''நேர்மையற்ற நடுவரே இப்படிச் சொன்னாரென்றால் தாம் தேர்ந்துக் கொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? அவர்களுக்குத் துணை செய்யக் காலம் தாழ்த்துவாரா? விரைவில் அவர்களுக்கு நீதி வழங்குவார். என நான் உங்களுக்குச் சொல்கின்றேன். ஆயினும் மானிட மகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ?'' என்றார்.

(லூக்கா 18 : 1 - 8)

இயேசு கிறிஸ்துவைப் போல் நாமும் எமது அன்றாட வாழ்வில் செபிக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்வோம்.

## 2. பிறவினத்தவரின் நற்செய்தி

பிற இனத்தவர் என்றால் யூதரல்லாதவர்கள். லூக்கா நற்செய்தி பிறவினத்தாருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறபடியால் அது பிறவினத்தாரின் நற்செய்தி என அறிமுகப் படுத்தப்படுகின்றது.

**உதாரணங்கள்**

† இயேசுவின் பிறப்பு எல்லா இனத்தவருக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி என்று வானதூதர் அறிவித்தார்.

(லூக்கா 2 : 14 )

† இஸ்ரயேலரின் மீட்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிமியோன் என்ற நேர்மையாளர் இயேசு பிறவினத்தாருக்கு இருளகற்றும் ஒளி என்று கூறினார்.

(லூக்கா 2 : 32)

† நல்ல சமாரியர் பற்றிய உவமையிலும் உதவியற்று இருந்தவனுக்கு உதவி செய்தவர் சமாரியன் என்று காட்டப்படுகின்றது.

(லூக்கா 10 : 30 - 37)

## 3. இரக்கத்தின் நற்செய்தி

இயேசுவின் பகிரங்கப் பணியில் பாவிகளுக்கு இரக்கம் காட்டியதாக லூக்கா குறிப்பிடுகிறார்.

**உதாரணம்**

வழிதவறிப்போன ஆடுகளைத் தேடிச்செல்லும் ஆயனைப் போல, இயேசு பாவிகளைத் தேடிச் செல்கிறார் என்பதை காணாமற்போன ஆட்டின் உவமை பின்வருமாறு விளக்குகிறது.

வரிதண்டுவோர், பாவிகள் யாவரும் இயேசு சொல்வதைக் கேட்க அவரிடம் நெருங்கி வந்தனர். பரிசேயரும், மறைநூல் அறிஞரும் ‘இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே’ என்று முணுமுணுத்தார். அப்போது அவர் அவர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார். ‘உங்களிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று காணமற் போனால் அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் பாலைநிலத்தில் விட்டுவிட்டு காணாமல் போனதை கண்டுப்பிடிக்கும்வரை தேடிச்செல்ல மாட்டாரா? கண்டு பிடித்ததும், அவர் அதை மகிழ்ச்சியோடு தம் தோள்மேல் போட்டுக் கொள்வார். வீட்டுக்கு வந்து, நண்பர்களையும் அண்டை வீட்டாரையும் அழைத்து, என்னோடு மகிழுங்கள், ஏனெனில் காணாமல் போன என் ஆட்டைக் கண்டுபிடித்து விட்டேன்’ என்பார். அதுபோலவே மனம்மாறத் தேவையில்லாத் தொண்ணுற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

(லூக்கா 15 : 1 - 7)

### 4. தூய ஆவியானவரின் நற்செய்தி

ஏனைய நற்செய்திகளை விட, இந்நற்செய்தியில் தூய ஆவியானவரின் செயற்பாடுகள் பற்றி அதிகம் குறிப்பிடப்படுவதால், தூய ஆவியானவரின் நற்செய்தி என அழைக்கப்படுகின்றது.

**உதாரணம்**

இயேசு திருமுழுக்குப் பெறும் போது தூய ஆவியானவர் புறா வடிவமாக அவர் மேல் வந்திறங்கினார்.

(லூக் 3: 21- 22 )

### 5. பெண்களின் நற்செய்தி

ஏனைய நற்செய்திகளை விட பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசு கிறபடியால் பெண்களின் நற்செய்தி என பெயரிடப்பட்டுள்ளது.

மீட்புத் திட்டத்திலே மரியாளினதும், ஏனைய பெண்களினதும் சேவைகள் விபரிக்கப் படுகிறது.

**உதாரணங்கள்**

1. இயேசுவின் தாய் மரியாள் (லூக்கா 1 : 26 - 56, 2 : 1 - 21 )
2. எலிசபெத் (லூக்கா 1 : 5 - 6 )
3. அன்னா (லூக்கா 2 : 36 - 38 )
4. நயீன் ஊர் கைம்பெண் (லூக்கா 7 : 11 - 17 )
5. பாவிப்பெண் (லூக்கா 7 : 36 - 50 )
6. இயேசுவுக்குப் பணிவிடை புரிந்த சில பெண்கள் (லூக்கா 8 : 1 - 3)
7. மார்த்தா மரியாள் (லூக்கா 10 : 38 - 42)

9. எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுதல் (லூக்கா 23 : 27 - 28)

8. உடல் ஊனமுற்ற பெண் (லூக்கா 13 : 10 - 17 )

ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் மகளாகிய அன்னா என்னும் இறைவாக்கினர் ஒருவர் இருந்தார். அவர் வயது முதிர்ந்தவர். மணமாகி ஏழு ஆண்டுகள் கணவரோடு வாழ்ந்தபின் கைம்பெண் ஆனவர். அவருக்கு வயது எண்பத்து நான்கு. அவர் கோவிலை விட்டு நீங்காமல் நோன்பிருந்து மன்றாடி அல்லும் பகலும் திருப்பணி செய்து வந்தார். அவரும் அந்நேரத்தில் அங்குவந்து கடவுளைப் புகழ்ந்து எருசலேமின் மீட்புக்காகத் காத்திருந்த எல்லாரிடமும் அக்குழந்தையைப் பற்றிப் பேசினார்.

(லூக்கா 2 : 36 – 38 )

## 6. ஏழைகளின் நற்செய்தி

ஏழைகளை ஒதுக்கி வைக்காது, அவர்களும் இறைவனுக்கு ஏற்புடையவர்கள் என்று உறுதிப்படுத்துகிறபடியால் ஏழைகளின் நற்செய்தி என்றும் கூறப்படுகின்றது.

**உதாரணங்கள்**

† இயேசுவின் பிறப்பு ஏழ்மையுள்ளம் கொண்ட இடையர்களுக்கு முதலாவதாக அறிவிக்கப்படுகின்றது. வானதூதர் அவர்களிடம் ''அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கின்றார்.''

(லூக்கா 2 : 10 )

† இறையாட்சி ஏழைகளுக்கே உரியது. இயேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக் கூறியவை; ''ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர், ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே.''

(லூக்கா 6 : 20)

## 7. ஒடுக்கப்பட்டவர்களின் நற்செய்தி

ஒடுக்கப்பட்டவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதால் இது ஒடுக்கப்பட்டோரின் நற்செய்தியெனவும் கூறப்படுகின்றது.

**உதாரணம்**

† சக்கேயுவின் மனமாற்றம் (லூக் 19 : 1 - 10)

சக்கேயு உரோமை அரசருக்காக வரி தண்டுபவராக கடமையாற்றினார். வரிதண்டுபவரை யூத சமூகத்தினர் பாவிகள் என்று கருதினார்கள். ஏனெனில் இவர்கள் பொதுமக்களை வற்புறுத்தி அளவுக்கதிமாக வரி தண்டியதுமல்லாமல் மேலதிகமான தொகையைத் தாமே வைத்துக் கொண்டனர். இதனால் சமூகம் இவர்களை அதிகமாக வெறுத்தது. இவர்கள் மீதும் இயேசு இரக்கம் கொண்டு நல்வழிப்படுத்தினார்.

இயேசு எரிகோவிற்கு சென்று அந்நகர் வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கு சக்கேயு என்னும் பெயருடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வரிதண்டுவோருக்கு தலைவர். இயேசு யார் என்று அவர் பார்க்க விரும்பினார். மக்கள் திரளாய்க் கூடியிருந்ததால் அவரைப் பார்க்க முடியவில்லை. ஏனெனில் சக்கேயு குட்டையாய் இருந்தார். அவர் முன்னே ஓடிப்போய், அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டு அத்திமரத்தில் ஏறிக்கொண்டார். இயேசு அவ்வழியேதான் வரவிருந்தார். இயேசு அந்த இடத்திற்கு வந்தவுடன் அண்ணாந்துப் பார்த்து அவரிடம் ''சக்கேயு விரைவாய் இறங்கி வாரும், இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்.'' என்றார். அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றார். இதைக் கண்டயாவரும் ''பாவியிடம் தங்கப்போகிறாரே இவர்'' என்று முணுமுணுத்தனர். சக்கேயு எழுந்து நின்று ஆண்டவரே, என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்து விடுகிறேன். எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காக திருப்பிக் கொடுத்து விடுகின்றேன். என்று அவரிடம் கூறினார். இயேசு அவரை நோக்கி ''இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று, ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே! இழந்துப் போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்'' என்று சொன்னார்.

(லூக்கா 19 : 1 - 10)

லூக்கா நற்செய்தி சமூகத்தில் உள்ள பல்வேறு தரப்பினருக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளதுபோல, நாமும் எம்முடன் வாழும் பல்வேறு சமூகப் பிரிவினரை எந்தவிதத்திலும் ஒதுக்காது அவர்களை அன்பு செய்து வாழும் நல்ல மனப்பக்குவத்தை எம்மில் ஏற்படுத்திக் கொள்வோம்.

### செயற்பாடு

1. தூய லூக்கா நற்செய்தி வேறு எப்பெயர்களால் அறிமுகப்படுத்தப்படுகின்றது? ஐந்து பெயர்கள் தருக.

2. தூயலூக்காநற்செய்தி 'செபத்தின்நற்செய்தி' எனஅறிமுகப்படுத்தப்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக.

### வாழ்க்கைக்கு

ஒடுக்கப்பட்டவர்களை மதித்து வாழுவோம்.

# 4

# லூக்கா நற்செய்தியின் படிப்பினைகள்

மிகப் பழமையான காலத்திலிருந்தே மனிதர்கள் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்குப் பலவகையான வழிமுறைகளைக் கையாண்டனர். இன்று முற்காலத்தை விட இலகுவாகவும், ஒழுங்குமுறையாகவும் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள வாய்ப்புக்கள் பெருகியுள்ளன.

**சிந்தியுங்கள்...**

உங்களுக்கு முக்கியமான செய்தி கிடைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள முயற்சி எடுப்பீர்கள் அல்லவா? அச்செய்தியின் பெறுமதி இரு தரப்பினர் பகிர்ந்து கொண்டு பெற்றுக் கொள்ளும் பயன்பாட்டில் அடங்கியுள்ளது.

உங்கள் வாழ்விலே இன்றைக்கு நீங்கள் முக்கியமான ஒரு செய்தியைக் கேட்கப் போகிறீர்கள். தூய லூக்காவின் நற்செய்தி பற்றி நாங்கள் பேசினோம். இன்று அதில் உள்ளடங்கி இருக்கும் செய்தியைச் சிந்திப்போம். முழு உலகிற்கே வெளிப்படுத்தப்பட்ட நற்செய்தியாக தூய லூக்கா நற்செய்தி அமைந்துள்ளது. எனவே தூய லூக்கா நற்செய்தியில் அடங்கியுள்ள செய்தியானது முழு உலகிற்குமே உரியது. அவ்வாறாயின் லூக்கா நற்செய்தியில் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், அதன்படி வாழ்வதற்கும் எமக்குக் கிடைக்கும் முக்கிய செய்தி என்னவென்று இனங்காண்போம்.

## 1. மகிழ்ச்சியும் நன்றியும்

மகிழ்ச்சி நிறைந்த புகழ்பாக்களினால் இந்த நற்செய்தி அமைக்கப்பட்டுள்ளது.

- ✝ மரியாளின் பாடல் (லூக்கா 1 : 46 - 55)
- ✝ செக்கரியாவின் பாடல் (லூக்கா 1 : 68 - 79)

† வானதூதர்களின் பாடல் (லூக்கா 2 : 68)

† மீட்பரை அடையாளம் கண்டு கொண்ட சிமியோனின் பாடல் (லூக்கா 2 : 29 - 32)

நாமும் மகிழ்ச்சியான நேரங்களில் இறைவனை மறக்காமல் அவரைத் துதித்துப்பாடி நன்றி கூற மறக்கக் கூடாது. இறைவனைத் துதித்து வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக மாற்றிக் கொள்வோம்.

## 2. தமக்குரியதை பொறுப்புடன் பயன்படுத்தல்

† உள்ளவர்கள் இல்லாதவர்களுடன் பகிர திருமுழுக்கு யோவான் அழைப்பு விடுக்கிறார். (லூக்கா 3 :10 - 14)

† அறிவற்ற செல்வனின் உவமை வழியாக செல்வத்தின்மீது பற்றின்றி வாழ வேண்டும் என்பது பற்றி இயேசு போதித்தார்.
(லூக்கா 12 : 13 - 21 )

† செல்வரும் இலாசரும் பற்றிய உவமையில் இதைப்பற்றி விபரமாகச் சொல்லப் படுகின்றது.

செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார். இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது. அவர் அச்செல்வருடைய வீட்டு வாயில் அருகே கிடந்தார். அவர் செல்வருடைய மேசையிலிருந்து விழும் துண்டுகளால் தம் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும். அந்த ஏழை இறந்தார். வானத்தூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு சேர்த்தார்கள்.

செல்வரும் இறந்தார் அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டபோது அண்ணாந்து பார்த்து தொலைவில் ஆபிரகாமையும் அவர் மடியில் இலாசரையும் கண்டார். அவர் 'தந்தை ஆபிரகாமே, எனக்கு இரங்கும். இலாசர் தமது விரல் நுனியை தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச் செய்ய அவரை அனுப்பும், ஏனெனில் இந்தத் தீப்பிழம்பில் நான் மிகவும் வேதனைப்படுகின்றேன்.' என்று உரக்கக் கூறினார். அதற்கு ஆபிரகாம் 'மகனே நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய், அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக் கொள். இப்போது அவர் இங்கே ஆறுதல் பெறுகின்றார். நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய் என்றார்.

(லூக்கா (16 : 19 - 31 )

இலாசரின் தேவையை தேடி அறிந்து உதவி செய்யாமையினாலயே செல்வருக்கு விண்ணகம் செல்ல முடியவில்லை. எனவே செல்வத்திற்கும் உலக சொத்துக்களுக்கும் அடிமைப்படாமல் இவற்றைப் பொறுப்புடன் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். உள்ளவர் இல்லாதவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எனவே எளிமையான வாழ்க்கை முறை முக்கியமானதாக உள்ளது. எளிமையான வாழ்க்கை வாழ எளிய மனம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

### 3. சமய வழிபாடுகள் (சமய சட்டங்களை மதித்தல்)

✝ செக்கரியா பீடத்தில் தூபம் காட்டும் நிகழ்வோடு லூக்கா நற்செய்தி ஆரம்பமாகிறது.

(லூக்கா 1 : 5 - 23)

✝ எல்லா யூத ஆண் தலைபேறுகளும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்ற திருச்சட்டம் தொடர்பான கட்டளையை நிறைவேற்ற கோவிலிற்கு குழந்தை இயேசுவை கொண்டு சென்றமை.

(லூக்கா 2 : 22 - 31)

✝ இயேசு பாஸ்கா திருவிழா கொண்டாடுவதற்கு தாய் மரியா தந்தை யோசேப்புடன் எருசலேம் கோவில் சென்றமை.

(லூக்கா 2 : 41 - 52)

சமூகத்தின் சட்டங்களை மதித்து நடக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். விசேடமாக சமய சட்டதிட்டங்கள் எமக்கு நல்வழிகாட்டுகின்ற காரணத்தினால் அவைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து, சட்டத்திட்டங்களை மதித்து ஒத்துழைப்புடன் வாழ்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும். மற்றவர்களுக்காக துன்ப துயரங்களை சகிப்பதற்கு இயேசுவைப் போல பிறருக்காக உடைக்கப்படவும், நொறுக்கப்படவும், அர்ப்பணிக்கப்படவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

**செயற்பாடு**

1. தூய லூக்கா நற்செய்தி தரும் படிப்பினைகள் மூன்று தருக.
2. அதில் ஒரு படிப்பினையை உமது வாழ்க்கையில் எவ்விதம் நடைமுறைப் படுத்துவீர் என்பதை எழுதுக.

**வாழ்க்கைக்கு**

நற்செய்திப் படிப்பினையால் நம் வாழ்வை ஒளிர்விப்போம்.

# 5

# லூக்கா நற்செய்தியின் அமைப்பு

உங்கள் வீடு எவ்வகை அமைப்புக்குள் கட்டி எழுப்பப்பட்டுள்ளது என்பதைச் சற்று சிந்தியுங்கள். வீட்டின் நுழைவாயில் அறைகளின் எண்ணிக்கை, அந்த அறைகள் எதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. கதவுகள், ஜன்னல்கள் எத்தனை? எப்படி அமைக்கப்பட்டுள்ளது? வீட்டின் அமைப்பைப் பற்றி நல்ல அறிவு உமக்கு இருப்பதால் அவ்வீட்டில் உமக்கு இலகுவாக வாழ முடிகிறது. உமது வீட்டைக் கட்ட ஒருவர் இருந்திருக்கிறார். அவரின் திட்டப்படியே உமது வீடு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

நூல் அமைப்பைப் பற்றி அறிந்திருந்தால், அதைப் பயன்படுத்துவது இலகுவாக இருந்திருக்கும். ஒரு சிறந்த எழுத்தாளராக தமது நூலை நல் ஒழுங்கமைப்புடன் நற்செய்தியாக அமைத்துக் கொடுத்திருக்கிறார் தூய லூக்கா. எனவே நற்செய்தியை இலகுவாக எழுதவும் வாசிக்கவும் முடிகிறது.

### அர்ப்பணம் (லூக்கா 1 : 1 – 4)

சிறந்த எழுத்தாளரான லூக்கா தன்னுடைய நூலைப் பற்றிய ஒரு அறிமுகத்தை நற்செய்தியின் தொடக்கத்திலே தருகிறார், (லூக்கா 1 : 1). தூய லூக்கா தமது நூலிலே தாம் கண்களால் கண்டவற்றை அல்ல, மாறாக தான் கேட்டு அறிந்தவற்றின் அடிப்படையிலே இந்நற்செய்தியை எழுதியுள்ளார். பெற்றுக் கொண்ட விடயங்களையே நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தாம் சேகரித்த விடயங்களை ஒழுங்குப்படுத்தி, அவற்றைத் தொகுத்து தந்துள்ளார்.

(லூக்கா 1 : 1 - 4 )

இவர் தனது நூலை ‘மாண்புமிகு தியோபில்’ என்பவருக்கு அர்ப்பணம் செய்துள்ளார்.(லூக்கா 1 : 1) தூய லூக்கா நற்செய்தியின் இரண்டாவது பாகமாகக் காணப்படுகிற ‘திருத்துதர் பணிகள்’ என்ற நூலையும் இவருக்கே அர்ப்பணம் செய்கிறார்.

(தி.ப 1 : 1) 'தியோபில்' என்ற பெயரின் அர்த்தம் **'இறைவனின் நண்பன்'** என்பதாகும். 'மாண்புமிகு' என்ற சொல்லால் அவர் சமூகத்தில் உயர் அதிகாரியாக இருந்திருக்கிறார் என்பதை அறிய முடியும்.

**இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள்** (லூக்கா 1 : 5 - 2 : 52)

இயேசுவின் குழந்தைப் பருவத்தைப் பற்றி தூய மத்தேயு, தூய லூக்கா ஆகிய இரு நற்செய்தியாளர்களும் விபரித்துள்ளனர். லூக்கா சிறப்பான முறையில் நூலை எழுத விரும்பியதால் இயேசுவின் பிறப்பிலிருந்து விபரங்களை ஒழுங்கு படுத்தியிருக்கின்றார். இயேசுவின் பிறப்பு (லூக்கா 2 : 1 - 20) குழந்தை இயேசுவை எருசலேம் தேவாலயத்தில் அர்ப்பணம் செய்தல் (மத்தேயு 2:22-38), இயேசுவின் குழந்தைப்பருவம் (லூக்கா2:39-40) பன்னிரண்டு வயதில் எருசலேம் கோயிலில் பெற்றோரை விட்டுப்பிரிந்து மறுபடியும் கோயிலில் கண்டு பிடிக்கப்பட்டது. (லூக்கா 2 : 41 - 52) ஆகிய நிகழ்வுகளை இங்கு விபரித்துள்ளார்.

**திருப்பணிக்குத் தயார் செய்தல்** (லூக்கா 3 : 1 - 4 : 13)


இயேசுவின் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்துவதே திருமுழுக்கு யோவானின் பணியாக அமைந்தது. இவர் தமது போதனையால், மக்களை மனம் திருப்பி, மனம் திருப்பியதன் அடையாளமாக தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார். ஏசாயா இறைவாக்கினர் கூறுவது போல, பாலை வனத்தில் ஒலிக்கும் குரல் திருமுழுக்கு யோவானே, (எசாயா 40 : 3 - 5) முற்காலத்து இறைவாக்கினர் எல்லோரையும் விட இவர் மேன்மையானவராக உள்ளார். திருமுழுக்கு யோவான் இயேசுவின் வருகைக்காகவும், அவருடைய பணிக்காகவும் மக்களது உள்ளங்களை ஆயத்தம் செய்வதையே தமது பணியாகக் கொண்டிருந்தார். இவர் பாலை நிலத்தில் செபத்திலும் தவத்திலும் ஈடுப்பட்டு, கடினமான வாழ்க்கை வழியாக உண்மைக்குச் சான்று பகர்ந்த நேர்மையார் ஆவார்.

**இயேசுவின் கலிலேயப் பணி** (லூக்கா 4 : 14 - 9 : 50)

இயேசு தமது பகிரங்கப் பணியை கலிலேயாவில் ஆரம்பித்தார். அவரது போதனைகளும் குணமளிக்கும் புதுமைகள் சிலவும் இப்பகுதியில் காணப்படுகிறது.

**கலிலேயாவிலிருந்து எருசலேம் நோக்கிப் பயணம்** (லூக்கா 9 : 51 - 19 :27)

கலிலேயாவில் திருப்பணி ஆற்றி முடித்த பின்னர் இயேசு தம் பணியைத் தொடர்ந்து ஆற்ற எருசலேமுக்குச் சென்றார். கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான அநேக படிப்பினைகள் இப்பகுதியில் காணப்படுகிறது.



**எருசலேமில் திருப்பணி** (லூக்கா 19 : 28 - 21 :38)

*இயேசு எருசலேமில் ஆற்றிய திருப்பணிகள் இங்கு விபரிக்கப்பட்டுள்ளது.*

i. லூக்கா 19 : 28- 44 **இயேசு எருசலேமில் நுழைதல்.**
*இயேசு கழுதையின்மேல் ஏறி அரச வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமிற்குள் நுழைவது இங்கே விபரிக்கப்படுகிறது.*

ii. லூக்கா 19:45-48 *இயேசு எருசலேம் ஆலயத்தைத் தூய்மையாக்குதல் இப்பகுதியில் விபரிக்கப்படுகிறது. (இயேசு எருசலேம் ஆலயத்தில் வியாபாரிகளை விரட்டிய நிகழ்வு)*

iii. லூக்கா 20:1-21:37 இயேசு எருசலேமில் செய்தவைகள், போதித்தவைகள் இங்கே விபரிக்கப்படுகிறது.

**இயேசு துன்புற்று இறந்து உயிர்த்தெழுதலும், விண்ணேற்றமடைதலும்**
(**லூக்கா** 22 : 1 - 24 :53)

*நற்செய்திகளில் மிகவும் முக்கிய பகுதி என்று அழைக்கப்படும் பாஸ்கா மறைபொருள் (இயேசுவின் பாடுகளும், மரணமும், உயிர்த்தெழுதலும்) தொடர்பான நிகழ்வு இங்கே காணப்படுகிறது. எம்மாவுக்குச் செல்லும் வழியில் இயேசு சந்தித்த இரு சீடர்கள் தொடர்பான நிகழ்வும் இங்கே காணப்படுகிறது.*

ஒரு செயற்பாடு வெற்றிபெற வேண்டுமானால், தகுந்த ஆயத்தம் தேவையாகின்றது. வெற்றியை அடைவதற்கு நாம் ஒழுங்கு முறையானதொரு திட்டத்தைப் பின்பற்ற வேண்டும்.


**செயற்பாடு**

1. லூக்கா நற்செய்தியின் அமைப்பில் இருக்கும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.
2. பாலஸ்தீனா வரைபடத்தை வரைந்து முக்கியமான ஐந்து இடங்களை குறிப்பிடுக.

**வாழ்க்கைக்கு**

சீரான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஒழுங்கு முறை அவசியம் என்பதை விளங்கிக் கொண்டு, அவ் ஒழுங்கு முறைக்கேற்ப எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம்.

# 6 மெசியா பற்றிய இறைவாக்குகள்



6.1 ஆதாம் ஏவாள்

ஆதாம் ஏவாள் எமது ஆதிப்பெற்றோர். அவர்கள் இறைவனுக்குக் கீழ்படியாமல் போனார்கள். எனவே ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். தமது தவறுகளினாலும், தமது சுய விருப்பத்தினாலும் பாவத்தில் விழுந்த அவர்களை இறைவன் அன்பு செய்தார். இழந்துபோன முடிவில்லா வாழ்வை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு மீட்பரை அனுப்புவதாக இறைவன் வாக்குறுதி அளித்தார்.

## ஆபிரகாமின் அழைப்பு

உலகின் மீட்பராகிய இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பும் பொருட்டு, மீட்பின் வரலாற்றை ஆயத்தம் செய்வதற்காக இறைவன் ஆபிரகாமை அழைத்தார்.

ஆண்டவர் ஆபிராமை நோக்கி ‘‘உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்து புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயே ஆசியாக விளங்குவாய். உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன். உன்னை சபிப்போரை நானும் சபிப்பேன், உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்’’ என்றார்.

தொ. நூ 12 : 1 - 3)

இவ்வழைப்பிற்குப் பதில் கொடுத்த ஆபிரகாம் இறைவன் கூறியபடியே வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு புறப்பட்டார். இது அவர் இறைவன்மேல் கொண்ட அளவில்லா நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

ஆண்டவர் ஆபிராமுக்குக் கூறியப்படியே அவர் புறப்பட்டுச் சென்றார். அவருடன் லோத்துவும் சென்றார். ஆபிராம் ஆரானை விட்டுச் சென்றபொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து, ஆபிராம் தன் மனைவி சாராயையும், தன் சகோதரன் லோத்தையும் உடனழைத்துச் சென்றார். அவர்கள் ஆரானில் சேர்த்திருந்த செல்வத்துடனும், வைத்திருந்த ஆள்களுடனும் கானான் நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று அந்நாட்டைச் சென்றடைந்தனர். ஆபிராம் அந்நாட்டில் நுழைந்து செக்கேமில்இருந்த மோரேயின் கருவாலி மரத்தை அடைந்தார். அப்போது கானானியர் அந்நாட்டில் வாழ்ந்து வந்தனர்.

(தொ.நூ 12 : 4 - 6)

**மெசியாவைப் பற்றிய இறைவாக்குகள்**

இறைவன் தமக்கென ஒரு இனத்தைத் தெரிந்தெடுத்து அந்த இனத்திலிருந்து இவ்வுலகில் மீட்பரை பிறக்கச் செய்யவே ஆபிரகாமைத் தெரிந்தெடுத்தார். ஆபிரகாமின் வழிமரபினரே யூத இனத்தவர். அவ்வினத்தின் மேன்மை மிக்க அரசர் தாவீது, தாவீது அரசரின் பரம்பரையிலிருந்து உலக மீட்பர் தோன்றுவார் என்று இறைவாக்கினர்

நாத்தான் தாவீது அரசருக்கு அறிவித்ததை கீழ்க்காணும் வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

> ''உன் வாழ்நாள்கள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையரோடு துயில் கொள்ளும்போது, உனக்குப் பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப் பின் நான் உயர்த்தி, அவனது அரசை நான் நிலைநாட்டுவேன்... என் முன்பாக உனது குடும்பமும், உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும். உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்.''
>
> (2 சாமுவேல் 7 : 12 - 16)

கிறிஸ்து எமது அரசர். அவரது அரசு என்றென்றும் நிலைத்திருக்கும்.

இயேசு ஒரு கன்னிகையிடமிருந்து பிறப்பாரென்பதை கீழ்க் காணும் இறைவாக்கு எடுத்துரைக்கின்றது.

> ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருளுவார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் ''இம்மானுவேல்'' என்று பெயரிடுவார்.
>
> (எசாயா 7 : 14)

அந்த இளம்பெண் மரியா. அக்குழந்தைக்கு இம்மானுவேல் என்ற பெயர் வழங்கப்படும். ''கடவுள் நம்மோடு'' என்பதே அப்பெயரின் அர்த்தம். இயேசு இறைமகன் என்பதால், அவரது பிறப்பின் வழியாக இறைவன் எம்மோடு தங்க வந்துள்ளார்.

*நீயோ எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய்! ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார். அவர் தோன்றும் வழிமரபோ ஊழி ஊழிக் காலமாய் உள்ளதாகும். அவரே அமைதியை அருள்வார்.*

(*மீக்* 5 : 2 - 5)

இந்த வேதாகமப் பகுதியினூடாக இயேசு என்னும் மெசியா, சமாதானத்தின் இறைவன் பெத்லேகேமில் பிறப்பார். இவர் அமைதியின் புதல்வன் என அழைக்கப்படுவார். இழந்துபோன இறை உறவை அவர் மீண்டும் கட்டியெழுப்பி அமைதியை அருள்வார் என்பது வெளிப்படுத்தப்படுகிறது.

இறைவனின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அழைப்புப் பெற்றவர்கள் இறைவனின் குரலுக்கு செவிமடுத்துக் கீழ்ப்படிந்தார்கள் நாமும் இறைத்திட்டத்திற்குக் கீழ்ப்படிபவர்களாய் வாழ வேண்டும். இறைவன் எம்மையும் பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து, பல்வேறு சேவைகளுக்காக அழைக்கிறார். இறைவனின் மீட்புத் திட்டத்தை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இறைவார்த்தை வழியாக எமக்கும் இறைவனின் திட்டம் வெளிப்படுத்தப்படுகிறது. இதனால் எல்லாருக்கும் இறைவனுடைய மீட்புத் திட்டம் உரிமையாகிறது.

## செயற்பாடு

1. மெசியாவைப் பற்றி இறைவாக்கினர் முன்வைத்த இறைவாக்குகள் மூன்றைக் குறிப்பிடுக.

2. இறைத்திட்டத்துக்குக் கீழ்படிய நீர் செய்யக் கூடிய மூன்று செயற்பாடுகளை எழுதுக.

3. கீழ்க்காணும் பலவித சேவைகளுக்காக இறைபிள்ளையாகிய உமக்கு அழைப்புக் கிடைத்தால் அவ்வாறான சந்தர்ப்பங்களில், எவ்வாறு செயற்படுவீர்?

i. வகுப்புத் தலைவனாக நியமனம் பெறும்போது

ii. பாடசாலை மட்டத்தில் திருப்பலி ஏற்பாடு செய்யும்போது

iii. பாடசாலை விளையாட்டுப் போட்டித் தலைவராக நியமனம் பெறும்போது

iv. பங்கில் சிரமதானத்தில் பங்குபெறும்போது

## வாழ்க்கைக்கு

- இறைகுரலுக்குக் கீழ்படிவோம்.
- வழங்கப்பட்ட வேலைகளை பொறுப்புடனும் உற்சாகத்துடனும் செயற்படுத்துவோம்.
- இறைபிள்ளைகளாக செயற்பட்டு திருச்சபையை வளர்ப்போம்.

# 7 நிறைவேறிய மெசியா இறைவாக்குகள்

## திருமுழுக்கு யோவானின் பிறப்பை செக்கரியாவிற்கு முன்னறிவித்தல்

யூத மத குருவான செக்கரியா குருத்துவப் பணி மரபுக்கு ஏற்ப ஆண்டவரின் திருக்கோவிலுக்குச் சென்று தூபம் காட்டுவது யாரென்று அறியச் சீட்டுக் குலுக்கிப் போட்டபோது அது செக்கரியா பெயருக்கு விழுந்தது. அவர் தூபம் காட்டுகிற வேளையில் ஆண்டவரின் தூதர் ஒருவர் அவருக்குத் தோன்றினார். அவரைக் கண்டு செக்கரியா அச்சமுற்றுக் கலங்கினார். வானதூதர் அவரை நோக்கி இவ்வாறு கூறினார்.

'' செக்கரியா அஞ்சாதீர், உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம் மனைவி எலிசபெத்து உமக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு யோவான் எனப் பெயரிடுவீர் ''

(லூக்கா 1 : 13)

இறைவனின் செய்தியை நம்பாத வயது முதிர்ந்த செக்கரியா வானதூதரிடம் (பின்வருமாறு வினவினார்.)

''இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும்? நான் வயதானவன் அதுபோல் என் மனைவியும் வயது முதிர்ந்தவராயிற்றே''

(லூக்கா 1 : 18)

இறைவனின் செய்தியை நம்பாத செக்கரியாவிற்கு கிடைத்த தண்டனை.

''இதோ பாரும், உரிய காலத்தில் நிறைவேற இருக்கும் என்னுடைய வார்த்தைகளை நீர் நம்பவில்லை. ஆதலால் அவை நிறைவேறும் வரை நீர் பேச்சற்றவராய் இருப்பீர். உம்மால் பேசவே இயலாது.''

(லூக்கா 1 : 20)

வயதான செக்கரியாவிற்கும் எலிசபெத்திற்கும் வானதூதர் கூறியபடியே குழந்தை பிறந்தது. இதனால் வானதூதர் அறிவித்த இறைவாக்கு நிறைவேறிற்று.

**மரியாவிற்கு இயேசுவின் பிறப்பை முன்னறிவித்தல்**

கபிரியேல் என்னும் வானதூதர் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரில் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமான கன்னிமரியாவிற்குத் தோன்றிக் கூறியதாவது.

''அருள்மிகப் பெற்றவரே வாழ்க, ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்.''

(லூக்கா 1 : 28)

இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தபோது திரும்பவும் வானதூதர் அவரை நோக்கி கூறியதாவது.

''மரியா அஞ்சவேண்டாம், கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது''

(லூக்கா 1 : 30 - 33)

மரியாள் கபிரியேல் வானதூதரின் செய்தியை உறுதியாக நம்பி ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார்.

### யோசேப்புக்கு இயேசுவின் பிறப்பை முன்னறிவித்தல்.

மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தபோது மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. நேர்மையாளரான யோசேப்பு மரியாவை இகழ்ச் சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி பின்வருமாறு கூறினார்.

யோசேப்பே தாவீதின் மகனே உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்.
(மத்தேயு 1 : 20 - 21)

யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார்.

**இயேசுவின் பிறப்பு**

தூய நகராம் பெத்லேமில்
தேவ பாலகனும்
நேயமுடனே அவதரித்தார்
நெஞ்சம் மகிழ்ந்திடவே

மாமலை ஓரம் மாடடை குடிலில்
மாதவன் மனுவானார்
மாமரி மடியில் மன்னன் மைந்தன்
மாண்புடன் கண்ணயர்ந்தார்
மார்கழி மாதம் நடுங்கும் குளிரில்
மரியின் மனம் நெகிழ
பார்புகழ் வேந்தன் பனியில் நடுங்கி
பாசத்தில் தேங்கி நின்றார்.

தேனினும் இனிய தித்திக்கும் மொழியில்
தேவனின் தூதர்களும்
தேடியே வந்து வானகம் மகிழ
பாலனைப் புகழ்ந்தனரே...
பூமியில் நல்மனம் உள்ளவர் யாவரும்
சாந்தியுடன் வாழ
ஏழையின் பாவம் போக்கிட வந்தார்
என்றே பாடி நின்றார்.

*இயேசுவின் பிறப்பைப் பற்றி தூய லூக்கா கூறும் செய்தியாவது,*

அக்காலத்தில் அகுஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தார். அதன்படி சிரியா நாட்டில் குரேனியு என்பவர் ஆளுநராய் இருந்தபோது முதன்முறையாக மக்கள் தொகை கணக்கிடப்பட்டது. தம் பெயரை பதிவு செய்ய அனைவரும் அவரவர் ஊருக்குச் சென்றனர். தாவீதின் வழிமரபினரான யோசேப்பும் தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு பெயரைப் பதிவு செய்ய கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார். மரியா கருவுற்றிருந்தார். அவர்கள் அங்கிருந்தபோது மரியாவுக்கு பேறுகாலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை எனவே பிள்ளையைத் துணிகளில் பொதித்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்.

(லூக்கா 2 : 1 - 7)

இயேசுவின் பிறப்புடன் அவரைப்பற்றி இறைவாக்கினர் கூறியிருந்த இறைவாக்குகள் நிறைவேறியது. மரியா இறைவனின் குரலொலிக்குச் செவிமடுத்து கீழ்ப்படிந்து தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தாள். யோசேப்பும் இறைவனின் குரலொலிக்கு கீழ்ப்படிந்தார். இறைவனின் குரலுக்கு நாமும் கீழ்ப்படிய வேண்டும். இறைவன் பல்வேறு வழிகளில் நம்முடன் பேசுகிறார். அவரின் குரலுக்கு நாம் செவிமடுக்க வேண்டும். வாக்களிக்கப்பட்ட மெசியா ஏழைக் குழந்தையாக பெத்லகேம் பிறந்து ஏழைகளின் மனதை ஆறுதல்படுத்துகிறார்.

## செயற்பாடு

1. பின்வரும் திருவிவிலிய வசனங்களுக்கு சந்தர்ப்பம் கூறுக. (யாரால் யாருக்கு கூறப்பட்டது)

   i. ''இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும்?நான் வயதானவன்.''

   ii. ''அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்.''

   iii. ''........... ஏனெனில் அவர்தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்.''

## வாழ்க்கைக்கு

இறைவார்த்தையைத் தியானித்து இறைவனின் குரலொலிக்குக் கீழ்ப்படிந்து வாழ முயற்சி செய்வோம்.

# 8 தூய திருமுழுக்கு யோவான்



8.1 - தூய திருமுழுக்கு யோவான்

செக்கரியாவும் எலிசபெத்தும் தூய திருமுழுக்கு யோவானின் பெற்றோர்களாவர். தாயான எலிசபெத் மரியன்னையின் உறவினர். செக்கரியா அபியா வகுப்பைச் சேர்ந்த குரு ஆவார்.

திருமுழுக்கு யோவான் பிறந்த எட்டாம் நாள் அவருக்கு விருத்தசேதனம் செய்யவும் பெயர் சூட்டவும் ஆயத்தமாகிய சந்தர்ப்பத்தில், செக்கரியா ஆண்டவரின் தூதன் கூறியபடி யோவான் என்ற பெயரை எழுதவே அவர் வாய் திறந்து பேச்சாற்றலைப் பெற்றார்.

அவர் எழுதுபலகை ஒன்றைக் கேட்டு வாங்கி, ''இக்குழந்தையின் பெயர் யோவான்'' என்று எழுதினார். எல்லோரும் வியப்படைந்தனர். அப்பொழுதே அவரது வாய் திறந்தது. நா கட்டவிழ்ந்தது. அவர் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்.

(லூக்கா 1 : 63 - 64)

திருமுழுக்கு யோவான் தமது தூதுரைப் பணியை யோர்தான் நதியின் ஏனோத் ஆற்றுப்படுக்கையை அண்மித்த பகுதியில் ஆரம்பித்தார். இவர் ஒட்டக முடியிலான ஆடையை அணிந்து தோல் கச்சையை இடையில் கட்டி இருந்தார். வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் உண்டு வந்தார். இறைவனின் விசேட அழைப்பைப் பெற்ற இவர் வரவிருக்கும் மெசியாவாகிய இயேசுகிறிஸ்துவின் முன்னோடியாய் இருந்து அவரது வருகைக்காக மக்களை ஆயத்தம் செய்வதையே பணியாகக் கொண்டிருந்தார்.

**திருமுழுக்கு யோவானின் போதனை** (லூக்கா 3 : 1 - 14)

இறை செய்திக்குச் செவிமடுக்க சமுதாயத்தின் எல்லா நிலையிலுமுள்ள மக்கள் கூட்டம் திருமுழுக்கு யோவானிடம் வந்தது. அவர்களின் பாவ வாழ்வை எடுத்துக் காட்டி அவர்களை மனம்மாறச் செய்து மீட்பரை ஏற்றுக் கொள்ளச் செய்வதே முக்கிய தேவையாக விளங்கியது. அதற்காக உண்மையான மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இது வரை வாழ்ந்த பாவவாழ்வு, நேர்மையீனம், சுயநலம், அநீதி போன்றவற்றிலிருந்து விடுபட்டு வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறான பின்னணியில் திருமுழுக்கு யோவான் யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகள் அனைத்துக்கும் சென்று பாவமன்னிப்பு அடைய மனம்மாறி திருமுழுக்குப் பெறுங்கள் என்று பறைசாற்றி வந்தார். (லூக்கா 3 : 3)

அன்றைய சமுதாயத்தின் உயர் மேல்மட்டத்திலிருந்த பிரபுக்களை விளித்து இவ்வாறு கூறுகிறார்.

விரியன் பாம்புக் குட்டிகளே, வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்? மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர்கள்.

(லூக்கா 3 : 7 - 8)

யூதர்கள் தாம் ஆபிரகாமின் வழித்தோன்றல்கள் என்று பெருமைப்பட்டதோடு தாங்கள் செய்யும் எல்லாத் தவறுகளும் மன்னிக்கப்படும் என எண்ணி சமூகத்தில் பலவிதமான தீய செயல்களில் ஈடுப்பட்டனர். திருமுழுக்கு யோவான் அவர்களிடம் ஆபிரகாமின் வழிமரபினர் என்பதினால் மீட்புப் பெற முடியாது. மாறாக மீட்பு பெற மனம் வருந்துதல் முக்கியமானது என உறுதியாக எடுத்துக் கூறுகின்றார். அவ்வாறே நாமும் திருமுழுக்குப் பெறுவதினால் மாத்திரம் மீட்புபெற முடியாது. மாறாக நம் பாவங்களுக்காக மனம் வருந்தி மனமாற்றமடைந்து இறைவனுக்கு உகந்தவாறு வாழும்போதே மீட்பை அடைய முடியும்.

திருமுழுக்கு யோவான் யூதத்தலைவர்களை விரியன் பாம்புகளாக நோக்கு கின்றார். விரியன் பாம்பு பார்ப்பதற்கு அழகானது. கவர்ச்சியான வர்ணங்களைக் கொண்டது. ஆனால் தன்னிலே அதிக விஷத்தைக் கொண்டுள்ளது. இவ்வாறான சுயநலமுள்ள ஏமாற்றுக்கார முகமூடி அணிந்த பயங்கரமான மனிதர்கள் எமது சமூகத்திலும் உள்ளனர். அவர்களிடம் மனிதத்துவம் இல்லை. இத்தகையவர்கள் சமூகத்திற்கு தேவை இல்லை? சமூகத்திற்கு தேவையானவர்கள் நற்குணமுள்ள மனிதர்களே, அதற்கு உண்மையான மனமாற்றம் தேவை, மனமாற்றம் ஏற்படுவது உண்மையான மனஸ்தாபத்தினாலாகும். மனஸ்தாபம் ஏற்படுவதற்கு தாழ்ச்சியுடன் எமது பலவீனம், குறைபாடுகள், பிழைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவற்றை பின்பற்றாதவர்களுக்கு நிகழவிருக்கும் விளைவுகளைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

ஏற்கனவே மரங்களின் வேர் அருகே கோடரி வைத்தாயிற்று. நற்கனி தரா மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும்.

(லூக்கா 3: 9)

இவ்வாறு மனித வரலாற்றிலே தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை அறிவிக்கிறார். இவ்வறிவுரையினால் கலக்கமடைந்த மக்கள் கூட்டம் ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்'' என்று அவரிடம் கேட்ட வினாவிற்கு அவர் அளித்த பதில்.

'' இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும், உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்.''
(லூக்கா 3 : 11)

மனிதனுக்கு பொதுவாக இரண்டு உடைகள் அவசியமாகும். ஒன்றைத் தோய்த்து சுத்தமாக்கும்போது மற்றையதை பயன்படுத்த முடியும். எமக்கு மிகவும் முக்கியமானதை முதற்கொண்டு பிறருடன் பகிர்ந்து கொள்ளுமாறு திருமுழுக்கு யோவான் அழைப்பு விடுக்கிறார்.

திருமுழுக்கு யோவான் வரிதண்டுபவர்களுக்கு வழங்கும் அறிவுரை;

உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்.
(லூக்கா 3 : 13)

அக்காலத்தில் பாலஸ்தீனா நாடு உரோமை பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்தது. உரோமை அதிகாரிகள் தங்களுக்கு அடிமைப்பட்டிருந்த நாடுகளிலிருந்து பலவிதமான வரிகளை வசூலித்தனர். வரி தண்டுபவர்களுக்கு வசூலித்த பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்கப்பட்டது. வரித்தண்டுபவர்கள் தமது வருமானத்தை அதிகரிக்க குறிப்பிட்ட தொகைக்கு மேலாக வரி வசூலிக்க முற்பட்டனர். திருமுழுக்கு யோவான் படைவீரர்களுக்கும் இவ்வாறு அறிவுரை வழங்குகிறார்.

''நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள். யார்மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள் உங்கள் ஊதியமே போதுமென்றிருங்கள்.''

(லூக்கா 3 : 14)

திருமுழுக்கு யோவான் எதிர்பார்த்தது நீதி, நேர்மை, சமத்துவம், ஒற்றுமை, அன்பு, இரக்கம் ஆகிய பொது நலப் பண்புகளைக் கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்குவதேயாகும். இன்று திருமுழுக்கு யோவான் இலங்கைக்கு வந்தால், இதே செய்தியைத்தான் உங்கள் வாழ்க்கைக்கு முன்வைப்பார்.

## இயேசு கிறிஸ்துவைப் பற்றி திருமுழுக்கு யோவானின் சான்று

திருமுழுக்கு யோவான் மெசியாவாக இருப்பாரோ என மக்கள் தங்களுக்குள் எண்ணிக் கொண்டிருந்தவேளை, திருமுழுக்கு யோவான் அவர்களை விழித்துப் பின்வருமாறு கூறினார்.

''நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன். ஆனால் என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார். அவர் சுளகைத் தம் கையில் கொண்டு கோதுமையையும் பதரையும் பிரித்தெடுப்பார். கோதுமையைத் தம் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார்.''

(லூக்கா 3 : 16 - 17)

## திருமுழுக்கு யோவானின் மரணம் (மத்தேயு 14 : 1 - 12)

அக்காலத்தில் குறுநில மன்னன் எரோது அந்திபஸ் தன் சகோதரனின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொண்டிருந்தான். இம்முறையற்ற செயலைக் கண்டித்து பகிரங்கமாக எதிர்த்தமையால் திருமுழுக்கு யோவான் சிறையிலடைக்கப்பட்டார். ஏரோது திருமுழுக்கு யோவானைக் கொலை செய்ய விரும்பினான். ஆயினும் மக்கள் கூட்டத்தினர் அவரை ஓர் இறைவாக்கினர் எனக் கருதியதால் அவர்களுக்கு அஞ்சினான். ஆயினும் ஏரோதியாளின் மகளுக்குக் கொடுத்த வாக்குறுதியின் காரணமாக அவரைக் கொலை செய்தான்.

ஏரோதின் பிறந்த நாளில் ஏரோதியாளின் மகள் அவையினர் நடுவில் நடனம் ஆடி ஏரோதை அகமகிழச் செய்தாள். அதனால் அவன் எதைக் கேட்டாலும் அளிப்பதாக அவன் ஒரு வாக்குறுதியை ஆணையிட்டு அறிவித்தான். அவள் தாய் சொல்லிக் கொடுத்தபடியே திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இங்கேயே எனக்குக் கொடும் என்று கேட்டாள். இதைக் கேட்ட அரசன் வருந்தினான். ஆனாலும் தான் விருந்தினர் முன் ஆணையிட்டதால் அதை அவளுக்கு கொடுக்கக் கட்டளையிட்டான். ஆள் அனுப்பிச் சிறையில் இருந்த யோவானின் தலையை வெட்டச் செய்தான். அவருடைய தலையை ஒரு தட்டில் வைத்துக் கொண்டுவரச் செய்து அதைச் சிறுமியிடம் கொடுத்தான்.

(மத்தேயு 14 : 6 - 11)

திருமுழுக்கு யோவனைப் போல் நாமும் உண்மைக்குச் சான்று பகர வேண்டும். உண்மை என்பது மனச்சான்றுக்கு ஏற்ப செயற்படுவதாகும். நமது வார்த்தையும் செயலும் எப்பொழுதும் உண்மைக்கும் நீதிக்கும் ஏற்றவாறு இருக்க வேண்டும். உண்மையே பிறரின் நம்பிக்கையைப் பெற்றுத்தருகின்றது.

## செயற்பாடு

1. திருமுழுக்கு யோவான் மெசியாவின் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்திய முறையை மூன்று உதாரணங்களுடன் முன்வைக்குக.

2. திருமுழுக்கு யோவானின் வாழ்க்கையிலிருந்து உமது வாழ்க்கைக்குப் பெறக்கூடிய முன்மாதிரிகைகள் ஐந்தினை எழுதுக.

3. உண்மை என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு உமது வாழ்க்கையில் உண்மைக்குச் சான்றுபகர்ந்த சந்தர்ப்பம் ஒன்றினை எழுதுக.

## வாழ்க்கைக்கு

- உண்மைக்காகவும் நீதிக்காகவும் செயற்படுவோம்.
- எம்மிடமுள்ளதைப் பிறருடன் பகிர்ந்து கொள்வோம்.

# 9 இயேசுவின் இறையாட்சிப் பணி



9.1 - இயேசு திருமுழுக்கு பெறும் நிகழ்வு

இயேசு யோர்தான் நதியில் திருமுழுக்கு யோவானின் கையினால் திருமுழுக்குப் பெற்றுத் தனது பகிரங்க வாழ்வையும் தூதுப்பணியையும் ஆரம்பித்தார். தூய லூக்கா அச்சிறப்புமிகு நிகழ்வைப் பற்றி பின்வருமாறு விபரிக்கிறார். வானம் திறந்தது. '' தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர் மீது இறங்கியது. அப்பொழுது '' என் அன்பார்ந்த மகன் நீயே உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்.'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

அன்று இயேசு யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்ற சந்தர்ப்பத்தைப் போன்று நாமும் திருமுழுக்குப் பெறும்போது தூய ஆவியானவரைப் பெற்று இறைபிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகிறோம்.

இயேசு யோர்தான் நதியில் பெற்ற சிறப்புமிக்க அனுபவத்தின் பின் பாலைநிலத்தில் நாற்பது நாட்கள் நோன்பிருந்து செபித்து சோதனையை வெற்றிக் கொண்டு தம் பணிக்கு தன்னை ஆயத்தப்படுத்தினார். இதை தூய லூக்கா இவ்வாறு அறிக்கையிடுகிறார்.

இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றை விட்டுத் திரும்பினார். பின்னர் இவர் அதே ஆவியால் பாலை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார்.

(லூக்கா 4 : 1 - 2)

இயேசு பாலைநிலத்தில் மூன்று முறை அலகையின் சோதனைகளுக்கு முகங் கொடுத்தார்.

இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றை விட்டுத் திரும்பினார். பின்னர் அவர் அதே ஆவியால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந்நாள்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. அதன் பின் அவர் பசியுற்றார். அப்பொழுது அலகை அவரிடம், 'நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும்' என்றது. அதனிடம் இயேசு மறுமொழியாக, 'மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை' என மறைநூலில் எழுதியுள்ளதே' என்றார். பின்பு அலகை அவரை அழைத்துச் சென்று உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவருக்குக் காட்டி, அவரிடம், 'இவற்றின்மேல் முழு அதிகாரத்தையும் இவற்றின் மேன்மையையும் உமக்குக் கொடுப்பேன். இவை யாவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன; நான் விரும்பியவருக்கு இவற்றைக் கொடுப்பேன். நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவையாகும்' என்றது. இயேசு அதனிடம் மறுமொழியாக, 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக என்று மறைநூலில் எழுதியுள்ளது' என்றார்.

பின்னர் அது அவரை எருசலேமுக்கு அழைத்துச் சென்று கோவிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி, 'நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும்; 'உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்' என்றும் 'உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக்கொள்வார்கள்' என்றும் மறைநூலில் எழுதியுள்ளது' என்றது. இயேசு அதனிடம் மறுமொழியாக, 'உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம்' என்றும் சொல்லியுள்ளதே' என்றார்.

(லூக் 4 : 1 - 12)

இச்சோதனைகளை வெற்றி கொண்ட பின்பு இயேசு தூய ஆவியின் வல்லமை உடையவராய்க் கலிலேயாவிற்குத் திரும்பினார். அவர் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்து வந்தார். எல்லோரும் அவரைப்பற்றிப் பெருமையாகப் பேசினர்.

**நாசரேத்தில் இயேசுவின் போதனை** (லூக்கா 4 : 16 - 21)

இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்தார். தமது வழக்கத்தின்படி ஓய்வு நாளில் தொழுகைக் கூடத்திற்குச் சென்று வாசிக்க எழுந்தார். இறைவாக்கினார் எசாயாவின் சுருளேடு அவரிடம் கொடுக்கப்பட்டது. அவர் அதைப் பிரித்த போது கண்ட பகுதியில் இவ்வாறு இருந்தது.

ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைபட்டோர் விடுதலை அடைவர் பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்.

(லூக்கா 4 : 18 - 19)

மேலேயுள்ள இறைவார்த்தைகளில் காணப்படுவதுபோல் இயேசுவின் பணியின் நோக்கமாவது ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், துன்புறுவோர், பார்வையற்றோர் அனைவருக்கும் நல்வாழ்வு அளித்து, ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவித்து எல்லா மனிதருக்கும் மீட்பை பெற்றுக்கொடுப்பதேயாகும்.

நாமும் எமது திருமுழுக்கு அழைப்பிற்குப் பிரமாணிக்கமாக வாழ வேண்டும். அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் சோதனைகளை வெற்றிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அதற்காக செபத்தினால் சோதனையை வெற்றி கொள்ள முயற்சி செய்ய வேண்டும். நாம் குழுவாக மறைத்தூதுப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

## செயற்பாடு

1. இயேசு இறைமகனென வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பமொன்றைக் குறிப்பிடுக.
2. நாசரேத்து தொழுகைக் கூடத்தில் இயேசு வாசித்த எசாயாவின் ஏட்டுச்சுருளின் பகுதியை எழுதுக.
3. நீர் வாழ்க்கையில் முகங்கொடுத்த சோதனை ஒன்றினைக் குறிப்பிட்டு அதை வெற்றிபெற்ற முறையை விபரிக்குக.
4. ''சோதனையை வென்ற இயேசு மாணவராகிய உமக்கு முன்மாதிரிகையானவர்'' லூக்கா 4 : 1 - 13 பகுதியின் துணையுடன் மேலே தரப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருத்தமான கதை ஒன்று எழுதுக.

## வாழ்க்கைக்கு

- திருமுழுக்கு அழைப்பிற்கு பிரமாணிக்கமாய் வாழ்வோம்.
- இறைவார்த்தையைப் பிறருக்கு எடுத்துச் செல்ல முடிந்தவரை ஒத்துழைப்பு வழங்குவோம்.
- அலகையின் சோதனையை வெற்றி பெற செபத்தினால் வலிமை பெறுவோம்.

# 10 இறையாட்சி



10.1 -

இறையாட்சி என்பது

- இறைவனின் அதிகாரத்திற்குட்பட்டது.
- பாவத்தைத் தவிர்த்து இறையருளில் வாழ்வது.
- மனித சமுதாயம் இறை சித்தத்திற்குப் பணிவது.
- அன்பு, உண்மை, நீதி, நேர்மை போன்ற விழுமியங்களின்படி வாழ்வது.

இயேசு இறையாட்சியைப் போதித்தார். இறையாட்சியைப் பற்றிய செய்தியே அவருடைய போதனையினதும் செயலினதும் மையமாக உள்ளது. இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். இறையாட் சியை வெற்றி கொள்ள நாம் அர்ப்பணத்துடன் செயலாற்ற வேண்டும். இயேசு இறையாட்சி விழுமியங்களை உவமைகள் மூலம் கற்பித்தார்.

† விதைப்பவன் உவமை (லூக்கா 8 : 5 - 8)

† புதையல், முத்து, வலை தொடர்பான உவமைகள் (மத்தேயு 13 : 44 - 50)

### விதைப்பவர் உவமை



10.2

இவ்வுவமை இறையாட்சியின் வளர்ச்சி, அவ் வளர்ச்சிக்குள்ள தடைகள் இறைவார்த்தையின்படி உருவாக வேண்டிய மன நிலை என்பன பற்றியெல்லாம் விளக்குகிறது. தூய ஆவியின் செயற்பாடுகளுக்கு நாம் இடம் கொடுக்குமளவுக்கே புதிய வாழ்வின் விதைகள் எம்மில் செழிப்பாக வளர்ச்சி அடையும். எனவே நாம் இறைவார்த்தைக்கு கவனமுடன் செவிமடுக்க வேண்டும்.

| விதைகள் விழுந்த நிலம் | விதைகளுக்கு நடந்தவை | உவமையின் விளக்கம் |
|---|---|---|
| வழியோரம் விழுந்த விதைகள் | வானத்துப் பறவைகள் அவற்றை விழுங்கி விட்டன. | விதை என்ற இறை வார்த்தையை அலகை உள்ளத் திலிருந்து எடுத்து விடுகிறது. |
| பாறைமீது விழுந்த விதைகள் | மண் ஆழமாக இல்லா ததால் அவை விரைவில் முளைத்தன. கதிரவன் மேலே எழ அவை காய்ந்து போயின. | இறைவார்த்தையை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டு சில காலம் அதன்படி நடப்பவர்கள் சோதனை வேளையில் இறைவார்த்தையை மறந்து விடுவார்கள். |

| | | |
|---|---|---|
| முட்செடிகளின் நடுவே விழுந்த விதைகள். | கூடவே வளர்ந்த முட் செடிகள் அவற்றை நெருக்கி விட்டன. | இறைவார்த்தையை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டு சிலகாலம் அதன்படி நடப்பார்கள் ஆனால் சோதனை வேளையில் இறைவார்த்தையை மறந்து விடுவார்கள். |
| நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் | நூறு மடங்காக விளைச் சலைக் கொடுத்தன. | இறைவார்த்தையைக் கேட்டு நேர்மையாக தூய்மையாக வாழ்வார்கள். |

**புதையல் உவமை**



10.3

ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டு பிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்து விட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக் கொள்கிறார்.

(மத்தேயு 13 : 44)

இவ்வுவமையின் மூலம் நாம் பெறும் செய்தி இறையரசை உரிமையாக்கிக் கொள்ள எமக்குச் சொந்தமான அனைத்தையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதாகும். மறைந்திருக்கும் புதையல் சிறிதாயினும் அதன் பெறுமதி விலை மதிக்க முடியாதது. இறையாட்சி பெரிய லௌகீக அரசாக இல்லாதிருப்பினும் அதன் பெறுமதியை அளவிட முடியாது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## முத்து உவமை



10.4

வணிகர் ஒருவர் நல்முத்துக்களைத் தேடிச் செல்கிறார். விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டவுடன் அவர்போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அதை வாங்கிக் கொள்கிறார்.

(மத்தேயு 13 : 45 - 46)

விண்ணரசின் பெறுமதியை இவ்வுவமை எடுத்துக் கூறுகிறது. வணிகன் தனது உடைமைகள் எல்லாவற்றையும் விற்று விலையுயர்ந்த முத்தை விலை கொடுத்து வாங்குகிறான். இறையரசைத் தேடிப் பெற்றுக் கொள்ள தமக்குரியதைத் தியாகம் செய்ய வேண்டியவர்களாகின்றோம்.

## வலை உவமை



10.5

விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டு வரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை இழுத்துக் கொண்டு போய்க் கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர். கெட்டவற்றை வெளியே எறிவர். இவ்வாறே உலக முடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடையே இருந்து தீயோரைப் பிரிப்பர். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.

(மத்தேயு 13 : 47 - 50)

மீன்கள் நிறைந்த வலையை மீனவர்கள் கரைக்குக் கொண்டு வந்து நல்ல மீன்களைக் கூடைகளில் நிரப்பிக் கெட்டவற்றை எறிந்து விடுவர். இதேபோல் இறுதித் தீர்ப்பின்போது நேர்மையாளரையும் தீயோரையும் பிரித்தெடுத்து அவர்களுக்குரிய தீர்ப்பை இயேசு வழங்குவார் என்பதை இவ்வுவமை கற்பிக்கின்றது.


**செயற்பாடு**

1. இறையாட்சி பற்றிக் கூறப்படும் உவமைகள் 5 தருக.
2. அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக எழுதி அதன் படிப்பினைகளைச் சுருக்கமாக எழுதுக.

**வாழ்க்கைக்கு**

இறையாட்சியின் பண்புகளை எம்மில் வளர்த்துக் கொள்வோம்.

# 11 இயேசு செய்த புதுமைகள்



11.1 இயேசு செய்த புதுமைகள்

இயற்கை நியதிகளுக்கு அமைவாக இடம்பெறாத நிகழ்வு புதுமை என அழைக்கப்படுகின்றது.

## இயேசு செய்த புதுமைகளின் வகைகள்

1
இயற்கையுடன் தொடர்புடையவை
உ+ம் : புயலை அடக்குதல்

2
நோயாளரைக் குணமாக்குதல்.
உ+ம் : உடல் ஊனமுற்ற பெண் ஓய்வு நாளில் குணமடைதல்.



3
அசுத்த ஆவியை விரட்டுதல்
உ+ம் : கெரசேனரில் பேய் பிடித்தவரை நலமாக்குதல்.

4
இறந்தவர் உயிர்பெறல்
உ+ம் : ஜாயிரின் மகள் உயிர் பெறல்.

## 1. இயற்கையுடன் தொடர்புடைய புதுமை

### காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் அடக்குதல்

ஒருநாள் இயேசுவும் அவருடைய சீடர்களும் படகில் ஏறியதும் ''ஏரியின் அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள்'' என்று அவர் அவர்களுக்குச் சொன்னார். அவர்களும் படகைச் செலுத்தினார்கள். படகு போய்க் கொண்டிருந்தபோது அவர் ஆழ்ந்து தூங்கிவிட்டார். அப்பொழுது ஏரியில் புயல் அடித்தது. படகு நீரால் நிரம்பியது. அவர்கள் ஆபத்துத்துக்கு உள்ளானார்கள். அவர்கள் அவரிடம் வந்து ''ஆண்டவரே ஆண்டவரே சாகப்போகிறோம்'' என்று சொல்லி அவரை எழுப்பினார்கள். அவர் விழித்தெழுந்து காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் கடிந்து கொண்டார். உடனே அவை ஓய்ந்தன. அமைதி உண்டாயிற்று. அவர் அவர்களிடம் ''உங்கள் நம்பிக்கை எங்கே?'' என்றார். அவர்கள் அச்சமும் வியப்பும் நிறைந்தவர்களாய் ''இவர் காற்றுக்கும் நீருக்கும் கட்டளையிடுகிறார். அவை இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே. இவர் யாரோ?'' என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள்.

(லூக்கா 8 : 22 - 25)

### புயலை அடக்கிய புதுமையினால் நமக்கு கிடைக்கும் செய்தி

★ இயேசு உண்மையாகவே இறைமகன் என்பதும்

★ இயற்கையும் அவருக்குக் கீழ்ப்படிகின்றன என்பதும்

இதனால் நாமும் இயேசுவில் நம்பிக்கை வைத்து அவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஏனெனில் இறைவார்த்தைக்கு ஏற்ற வகையில் எந்நேரமும் சரியானதை மட்டும் செய்ய முயற்சி எடுக்க வேண்டும். எமது நம்பிக்கை தளர்ச்சி அடையும்போது செபிப்பதனால் மீளவும் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முயற்சி செய்ய வேண்டும்.

## 2. நோயாளரை குணமாக்குதல் தொடர்பான புதுமைகள்

**உடல் ஊனமுற்ற பெண் ஓய்வு நாளில் குணமடைதல்.**

ஒய்வு நாளில் இயேசு தொழுகைக்கூடம் ஒன்றில் கற்பித்துக் கொண் டிருந்தார். பதினெட்டு ஆண்டுகளாகத் தீய ஆவிபிடித்து உடல் நலம் குன்றிய பெண் ஒருவர் அங்கு இருந்தார். அவர் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தார். இயேசு அவரைக் கண்டு அருகே கூப்பிட்டு ''அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்'' என்று கூறி, தம் கைகளை அவர்மீது வைத்தார். உடனே அவர் நிமிர்ந்து கடவுளைப் போற்றினார்.

(லூக்கா 13: 10 - 13)

இப்புதுமையின் மூலம் இயேசு அப்பெண்ணின் வேதனையைக் கண்டு உதவிபுரிந்த முறை வெளிப்படுத்தப்படுகின்றது. அப்பெண் இயேசுவிடம் கேட்காமலே இயேசு உதவி செய்ய முன்வருகிறார். நாமும் பிறரின் வேதனைகளைக் கண்டும் காணாதவராக இராது உதவிசெய்ய முன்வர வேண்டும்.

நாம் நோயாளருக்காக நாளாந்தம் செபிக்க வேண்டும். உடல், உள நோயினால் வருந்தும் மக்களுக்காகவும் செபிக்க வேண்டும். அவர்கள் அந்நோயிலிருந்து விரைவில் சுகம்பெற மன்றாட வேண்டும்.

## 3. அசுத்த ஆவியை விரட்டும் புதுமை

**கெரசேனர் பகுதியில் பேய்ப்பிடித்தவரை நலமாக்குதல்.**

அவர்கள் கலிலேலயாவுக்கு எதிரே இருக்கும் கெரசேனர் பகுதியை நோக்கிப் படகைச் செலுத்தினார்கள். கரையில் இறங்கியதும் அந்நகரைச் சேர்ந்த ஒருவர் அவருக்கு எதிரே வந்தார். பேய்ப்பிடித்த அவர் நெடுநாளாய் ஆடை அணிவதில்லை. வீட்டில் தங்காமல் கல்லறைகளில் தங்கி வந்தார். இயேசுவைக் கண்டதும் கத்திக்கொண்டு அவர்முன் விழுந்து ''இயேசுவே உன்னத கடவுளின் மகனே உமக்கு இங்கு என்ன வேலை? என்னை வதைக்க வேண்டாம் என உம்மிடம் மன்றாடுகின்றேன்.'' என்று அவர் உரத்தக் குரலில் கூறினார். ஏனெனில் அவரை விட்டு வெளியேறு அத்தீய ஆவிக்கு இயேசு கட்டளையிட்டிருந்தார். அது எத்தனையோ முறை அவரைப்பிடித்திருந்தது. அவ்வேளைகளில் அவர் சங்கிலிகளாலும் விலங்குகளாலும் கட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தும் அவற்றை உடைத்து எறிந்து விடுவார். அது மட்டுமல்ல தீய ஆவி அவரைப் பாலை நிலத்திற்கும் இழுத்துச் செல்லும். இயேசு அவரிடம் ''உம் பெயர் என்ன?'' என்று கேட்க அவர் ''இலேகியோன்'' என்றார். ஏனெனில் பல பேய்கள் அவருக்குள் புகுந்திருந்தன. அவை தங்களைப் பாதாளத்துக்குள் போகப் பணிக்க வேண்டாமென அவரை வேண்டின.

அங்கு ஒரு மலையில் பன்றிகள் பெருங்கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றுக்குள் புகும்படி தங்களை அனுமதிக்குமாறு பேய்கள் அவரை வேண்டின. அவரும் அதற்கு அனுமதி கொடுத்தார். பேய்கள் அவரை விட்டு வெளியேறி பன்றிகளுக்குள் புகுந்தன. பன்றிக் கூட்டம் செங்குத்துப் பாறையிலிருந்து ஏரியில் பாய்ந்து வீழ்ந்து மூழ்கியது. பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் நடந்ததைக் கண்டு ஓடிப்போய் நகரிலும் நாட்டுப்புறத்திலும் அறிவித்தனர். நடந்தது என்னவென்று பார்க்க மக்கள் இயேசுவிடம் வந்தனர். பேய்கள் நீங்கப்பெற்றவர் ஆடை அணிந்து அறிவுத் தெளிவுடன் இயேசுவின் காலடியில் அமர்ந்திருப்பதைக்கண்டு அஞ்சினர்.

நடந்ததைப் பார்த்தவர்கள் பேய்பிடித்தவர் எப்படி விடுவிக்கப்பட்டார் என்பதை அவர்களுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது கெரசேனரை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து திரண்டு வந்திருந்த மக்கள் அனைவரும் அச்சம் மேலிட்டவர்களாய்த் தங்களை விட்டுப் போகுமாறு இயேசுவை வேண்டிக் கொண்டனர். அவர் படகிலேறி திரும்பிச் சென்றார். அப்பொழுது பேய்கள் நீங்கப் பெற்றவர் தம்மைக் கூட்டிச் செல்லுமாறு இயேசுவிடம் மன்றாடினார். அவரோ ''உம்முடைய வீட்டிற்குத் திரும்பிப்போய் கடவுள் உமக்குச் செய்ததையெல்லாம் எடுத்துக் கூறும்'' என்று சொல்லி அவரை அனுப்பி விட்டார். அவரும் நகரெங்கும்போய் இயேசு தமக்குச் செய்ததையெல்லாம் அறிவித்தார்.

(லூக்கா 8 : 26 - 36)

இப்புதுமையின் மூலம் இறைமகனான இயேசுவின் வல்லமைக்குப் பேய்களும் கீழ்ப்படிகின்றன எனவும், அவர் எப்போதும் சாத்தான் பிடியிலிருந்து மனிதனை காப்பாற்றினார் எனவும், கூறப்படுகின்றது. நாம் சாத்தானின் சோதனைகளுக்கு உட்படாதவாறு இருக்க இயேசுவிடம் எப்போதும் செபிப்பதோடு எந்நேரமும் எம்மை இறைபாதுகாப்பிற்கு ஒப்படைப்போம். எமது வாழ்வை செப வாழ்வாக அமைத்துக் கொள்வோம்.

### 4. இறந்தவர் உயிர் பெறல்

தொழுகைக்கூடத் தலைவரான யாயீர் இயேசுவிடம் வந்து அவரின் காலில் விழுந்து தம்முடைய வீட்டிற்கு வருமாறு வேண்டினார். ஏனெனில் பன்னிரெண்டு வயதுடைய அவருடைய ஒரே மகள் சாகும் தறுவாயில் இருந்தாள். இயேசு அங்கு செல்லும் வழியில் மக்கள் கூட்டம் அவரை நெருக்கிக் கொண்டிருந்தது. தொழுகைக்கூடத் தலைவருடைய வீட்டிலிருந்து ஒருவர் வந்து ''உம்முடைய மகள் இறந்துவிட்டாள் இனி போதகரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்றார்.

இதைக்கேட்ட இயேசு சிறுமியின் தந்தையைப் பார்த்து ''அஞ்சாதீர் நம்பிக்கையோடு மட்டும் இரும். அவள் பிழைப்பாள்'' என்றார். வீட்டுக்குள் வந்ததும் பேதுரு, யோவான், யாக்கோபு, சிறுமியின் தாய் தந்தையரைத் தவிர வேறு எவரையும் அவர் தம்மோடு உள்ளே வர அனுமதிக்கவில்லை. அவளுக்காக அனைவரும் அழுது கொண்டிருந்தார்கள். இயேசுவோ ''அழாதீர்கள் அவள் இறக்கவில்லை உறங்குகின்றாள்.'' என்றார். அவள் இறந்துவிட்டாள் என்று அறிந்திருந்ததால் அவரைப் பார்த்து அவர்கள் நகைத்தார்கள். அவர் அவளது கையைப் பிடித்து சிறுமியே எழுந்திரு'' என்று கூப்பிட்டார். உயிர் மூச்சுத் திரும்பி வரவே, உடனே அவள் எழுந்தாள். இயேசு அவளுக்கு உணவு கொடுக்கப் பணித்தார். அவளுடைய பெற்றோர் மலைத்துப் போயினர். நடந்ததை எவருக்கும் சொல்ல வேண்டாம் என்று அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார்.

(லூக்கா 8 : 40 - 42, 49 - 56)

இறப்பு இயேசுவிற்கு தூக்கத்தைப் போன்றதாகும். இயேசுவில் நம்பிக்கை வைப்போரை தூக்கத்திலிருந்து எழுப்புவதைப்போல் இறப்பிலிருந்து உயிர்த்தெழச் செய்வார். இந்த நம்பிக்கையுடன் இவ்வுலகில் நல்லவர்களாக நேர்மையுடன் வாழ்வது எமது கடமையாகும்.

எமது வாழ்வில் புதுமைகளை அனுபவிக்க வேண்டுமானால்

- ✝ எல்லாம் இறைவனால் முடியுமென நம்ப வேண்டும்.
- ✝ நம்பிக்கையுடன் செபிக்க வேண்டும்.

### செயற்பாடு

1. இயேசு செய்த புதுமைகளை வகைப்படுத்தி ஒவ்வொரு உதாரணம் தருக.

2. உமது வாழ்வில் புதுமையை அனுபவித்த சந்தர்ப்பமொன்றை எழுதுக.

3. நோயினால் வருந்துபவர்கள் விரைவில் சுகம்பெற சொல்லக்கூடிய செபம் ஒன்றினை எழுதுக.

### வாழ்க்கைக்கு

- வாழ்வின் பிரச்சினைகளின்போது நம்பிக்கையுடன் செபிப்போம்.

# 12 நற்கருணை ஆண்டவர்



12.1 இறுதி இராவுணவு

நேரம் ஆனதும் இயேசு திருத்தூதரோடு பந்தியில் அமர்ந்தார். பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து ''இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்'' என்றார். அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து ''இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை.'' என்றார்.

(லூக்கா 22 : 14, 19 - 20)

இயேசு இறுதி இராவுணவின்போது நற்கருணையை ஏற்படுத்தினார். திருப்பலி நடைபெறும்போது இயேசுவின் இறுதி இராவுணவு நிகழ்வில் நாமும் பங்குபெறுகின்றோம். திருப்பலி கத்தோலிக்க திருவழிபாட்டின் மையமாக இருக்கின்றது. ஏனெனில் இறுதி இராவுணவின்போதும் திருப்பலியின்போதும் இயேசு நற்கருணையின் மூலம் அவரின் உடலினாலும் இரத்தத்தினாலும் நம்மை ஊட்டம் பெறச் செய்கின்றார். நற்கருணையில் அவர் உயிருடன் பிரசன்னமாக இருக்கின்றார். ஆதலால் நாம் அவரைப் பக்தியுடன் பெற வேண்டும். நற்கருணை பெறச் செல்லும்போதும் நற்கருணையைப் பெற்ற பின்னரும் கைகளைக் குவித்து வந்து முழந்தாளில் இருந்து சில நிமிடங்கள் பக்தியுடன் செபிக்க வேண்டும். நீர் முதன் முறையாக நற்கருணையைப் பெற்றுக் கொண்ட நாளை திரும்பவும் நினைவிற் கொள்ளவும். அன்று உம்மிடமிருந்த பக்தியும் மரியாதையும் இன்னும் இருக்கிறதா என சிந்தித்துப் பார்க்கவும்.



12.2 உயிருள்ள இயேசுவை எமது உள்ளத்தில் பெறுவோம்

## நற்கருணையின் சிறப்பியல்புகள்

1. அருளடையாளம்
2. உணவு
3. பலி
4. உடன்படிக்கை
5. நன்றி கூறுதல்
6. நினைவு கூறுதல்

## தேவ நற்கருணைக்கு முன்னடையாளங்கள்

### 1. மெல்கிசெதேக்கின் பலி

குருவும் அரசருமான மெல்கிசெதேக் முதன்முறையாக அப்பமும் திராட்சை இரசமும் கொண்டுவந்து கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தார்.

### 2. மன்னா

பாலைநிலத்தில் பசியால் வாடிய இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் மன்னா உணவைக் கொடுத்து அவர்களைப் போஷித்தார். (வி.ப 16 அதி)

### 3. இஸ்ரயேல் மக்களின் பாஸ்கா உணவு

இஸ்ரயேலர் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்று உடன் படிக்கை நாட்டிற்கு பயணமான நிகழ்வை நினைவுக் கூர்ந்து வருடந்தோறும் பாஸ்கா விழாவைக் கொண்டாடினர். இஸ்ரயேல் மக்கள் இவ்வேளையில் பாஸ்கா உணவாகிய புனித அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகினர்.

**4. அப்பங்களைப் பெருகச் செய்தல்.**

ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்தல். புதிய ஏற்பாட்டில் நற்கருணைக்கு முன்னடையாளமாகும்.



12.3

திருத்தூதர்கள் திரும்பி வந்து தாங்கள் செய்த யாவற்றையும் இயேசு விடம் எடுத்துக் கூறினார்கள். அவர்களை மட்டும் கூட்டிக்கொண்டு அவர் தனித்திருப்பதற்காகப் பெத்சாய்தா என்னும் நகருக்குச் சென்றார். அதை அறிந்து திரளான மக்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். அவர்களை அவர் வரவேற்று இறையாட்சியைப் பற்றி அவர்களோடு பேசி குணமாக வேண்டியவர்களை குணப்படுத்தினார். பொழுது சாயத் தொடங்கவே பன்னிருவரும் அவரிடம் வந்து ‘‘இவ்விடம் பாலை நிலமாயிற்றே சுற்றிலுமுள்ள ஊர்களுக்கும் பட்டிகளுக்கும் சென்று தங்கவும் உணவு வாங்கிக் கொள்ளவும் மக்கள் கூட்டத்தை அனுப்பி விடும்’’ என்றனர். இயேசு அவர்களிடம் ‘‘நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்’’ என்றார். அவர்கள் எங்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமே உள்ளன. நாங்கள் போய் இத்தனை பேருக்கும் உணவு வாங்கி வந்தால்தான் முடியும்.’’ என்றார்கள். ஏனெனில் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்கள் அங்கு இருந்தனர். இயேசு அவருடைய சீடர்களை நோக்கி ‘‘இவர்களை ஐம்பது ஐம்பது பேராக பந்தியில் அமரச் செய்யுங்கள்’’ என்றார். அவர் சொன்னபடியே அனைவரையும் அவர்கள் பந்தியில் அமரச் செய்தார்கள்.

(லூக் 9 : 10 - 17)

பிறரின் பசியின்போது அவர்களுக்கு உணவளிக்க இயேசு உடனடியாக செயற்பட்டார். நாமும் பசியினால் வாடும் பிறருக்கு எம்மிடமுள்ளதை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள முன்வருவோம். இதுவே இயேசு எமக்கு விடுக்கும் அழைப்பாகும்.

## செயற்பாடு

1. தேவ நற்கருணையின் சிறப்பியல்புகள் மூன்றினை எழுதுக.
2. தேவ நற்கருணைக்கு முன்னடையாளங்கள் மூன்று எழுதுக.
3. அப்பங்களைப் பலுகச் செய்த அருங்குறியை உமது சொந்த நடையில் எழுதுக.
4. தேவ நற்கருணையின் மூலம் உயிருள்ள இயேசுவைப் பெற்றுக் கொண்ட நீர் செய்யக் கூடிய நற்செயல்கள் மூன்று எழுதுக.

## வாழ்க்கைக்கு

நற்கருணையைப் பக்தியுடன் பெற்றுக் கொண்டு, உயிருள்ள ஆண்டவரிடம் செபிப்போம்.

# 13 நற்கருணை விருந்திற்கு ஆயத்தம்

**நிர்மலன்** : சென்ற ஞாயிறு எனக்குத் திருப்பலிக்கு வர முடியாமற் போனது. அதனால் இன்று இயேசுவை பெற்றுக்கொள்ள முடியாது.

**டேவிட்** : நானும் வரவில்லை. ஆனால் நான் இயேசுவைப் பெறுவேன். இயேசுவைப் பெறாவிட்டால் திருப்பலிக்கு வருவதில் அர்த்தமில்லை.
(இவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மறைப் பாடசாலை ஆசிரியை இவ்வாறு கூறினார்.)

**ஆசிரியர்** : பிள்ளைகளே இங்கே வாருங்கள். திருப்பலிக்கு வராதது பாவமாகும். திருப்பலிக்கு முன் குருவானவரிடம் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக் கொண்டு, இறைவனோடு ஒப்புரவாகிய பின் இருவரும் இயேசுவைப் பெற்றுக் கொள்ளலாம்.

**நிர்மலனும்**
**டேவிட்டும்:** நன்றி ரீச்சர்.

**நிர்மலன்** : நாங்கள் இருவரும் திருப்பலிக்கு முன் குருவானவரிடம் சென்று ஒப்புரவு செய்துகொள்வோம். தூய்மையான உள்ளத்துடன் இயேசுவைப் பெறவேண்டுமென்று எமக்குக் கற்பித்தது ஞாபகமா?

**டேவிட்** : நான் ஒரு பாவமும் செய்யவில்லை.

**நிர்மலன்** : ஏன்? டீச்சர் இப்போதுதானே கூறினார். திருப்பலிக்கு வராதது பாவமென்று. ஞாயிறு திருப்பலிக்கு வராதது பத்துக்கட்டளைகளில் மூன்றாவது கட்டளைக்கு எதிராகச் செய்யும் பாவமாகும்.

**டேவிட்** : எனக்குப் பசிக்கிறது. நான் சீக்கிரம் சாப்பிட்டு வருகின்றேன். நீயும் வா. றோல்ஸ் இரண்டு இருக்கின்றது.

**நிர்மலன்** : திருப்பலி ஆரம்பிக்க ஒரு மணித்தியாலயத்திற்கு முன்பு சாப்பிடலாம். இப்போது சாப்பிட வேண்டாம், திருப்பலிக்குப்பின் சாப்பிடு.

**டேவிட்** : நீ ஒவ்வொரு முறையும் திருப்பலிக்கு வரும்போது சாப்பிட்டு வருவதில்லையா? நான் முதல் முறை நற்கருணை பெறும்போது மாத்திரமே சாப்பிடவில்லை.

**நிர்மலன்** : நான் திருப்பலிக்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்புதான் சாப்பிடுவேன். ஒரு மணித்தியாலத்திற்குக் குறைவாக இருந்தால் சாப்பிட மாட்டேன். நாங்கள் பசியோடிருந்து நற்கருணையைப் பெறுகின்றோம் என்பதை இது குறிக்கின்றது. உடல் பசி ஆன்மீகப் பசியின் அடையாளமாகும்.

**டேவிட்** : உன்னால் நான் இன்று நல்லதொரு பாடத்தைக் கற்றுக் கொண்டேன். நாங்கள் சீக்கிரமாக ஆலயத்திற்குச் சென்று ஒப்புரவு செய்து கொள்வோம்.

## ஆன்மீக ஆயத்தம்

ஆன்மீக ஆயத்தம் என்பது பாவத்திலிருந்து விடுபடுதலாகும். ஆன்மீக ஆயத்தத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி தூய பவுல் இவ்வாறு கூறுகிறார்.

சாவான பாவம் செய்திருந்தால் நற்கருணையைப் பெறமுன் ஒப்புரவு செய்து கொள்ள வேண்டும். அற்ப பாவம் செய்திருந்தால் திருப்பலியின் ஆரம்பத்தில் தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புப் பெற்று நற்கருணையைப் பெற தகுதியுள்ளவராக வேண்டும்.

**திருச்சபைச் சட்டம் 916**

சாவான பாவம் செய்த ஒருவர் திருப்பலிக்கு முன் ஒப்புரவு அருளடையாளத்தினால் இறையருளைப் பெறமுடியாத சந்தர்ப்பத்தில் தனது பாவங்களுக்கு மனம் வருந்தி சந்தர்ப்பம் கிடைத்த உடன் ஒப்புரவு அருளடையாளத்தினால் இறையருளைப் பெறுவோம் என நினைத்து நற்கருணையைப் பெற முடியும்.

**உடல் ரீதியான ஆயத்தம்**

உடல்ரீதியான ஆயத்தம் என்பது நற்கருணையைப் பெறமுன் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது உணவோ பானமோ அருந்தாமல் உபவாசம் இருத்தலாகும். நீங்கள் விரும்பினால் இதைவிட அதிக நேரம் உபவாசம் இருக்கலாம். ஒரு மணித்தியாலத்திற்கு இடையில் தண்ணீர் அல்லது மருந்து பாவிப்பதற்கு தடையில்லை, ஒரு மணித்தியால உபவாசம் நோயாளிகளுக்கும், முதியோருக்கும் அவசியமற்றது.

நோயாளிகள், முதியோர்கள் மற்றும் திருப்பலி ஒப்புக்கொடுக்க குருவானவர் இல்லாதிருத்தல் போன்ற தகுந்த காரணங்கள் இருந்தால் திருப்பலியில் பங்கு கொள்ளாமல் நற்கருணையைப் பெற அனுமதி உண்டு. ஒரு நாளில் பல திருப்பலிகளில் பங்குபற்றும் ஒருவர் இரண்டு முறை மட்டுமே நற்கருணையைப் பெற அனுமதி உண்டு. இரண்டாம் முறை பங்குபற்றும் திருப்பலியில் தொடக்கம் முதல் இறுதிவரை பங்குபற்றுவது கட்டாயமாகும். ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிக்கு நோயிற்பூசுதல் வழங்க குருவானவர் வந்திருந்தால் நோயாளி அன்று திருப்பலியில் நற்கருணையைப் பெற்றிருந்தாலும் இரண்டாம் முறையும் நற்கருணையை திருப்பலியில் பங்குபெறாமல் பெற்றுக் கொள்ள முடியும்.

## செயற்பாடு

1. தேவ நற்கருணையைப் பெறுவதற்கு செய்ய வேண்டிய ஆன்மீக ஆயத்தத்தை சுருக்கமாக விபரிக்குக.

2. தேவ நற்கருணையைப் பெறுவதற்கு முன் எவ்வளவு நேரம் உபவாசம் இருக்க வேண்டும்?

## வாழ்க்கைக்கு

முறையான ஆயத்தத்துடன் தேவ நற்கருணையைப் பெற்றுக் கொள்வோம்.

# 14 திருவிவிலியத்தில் தூய ஆவி

என் துணையாளரே தூய ஆவியே
தண்ணீரின்மீது அசைந்து ஆடும்
ஆளுகையின் தேவனே
ஆராதிப்பேன் என் ஆருயிரே - 2

என்றும் தங்கும் துணையாளரே
எல்லாம் கற்றுத்தரும் என்நேசரே - 2
அக்கினியாய் என்மேல் இறங்கி வந்து
அபிஷேகம் செய்து என்னை ஆட்கொள்ளுமே!



14.1 ஆயர் உறுதிப்பூசுதல் வழங்குதல்

உண்மை நம்பிக்கையில் நம்மை உறுதிப்படுத்தி முதிர்ச்சிபெற்ற கிறிஸ்தவனாக முழுமை பெற தூய ஆவி எம்மில் செயலாற்றும் விசேட அருளடையாளம் உறுதிப்பூசுதலாகும். திருமுழுக்கினால் நாம் பெற்ற நம்பிக்கையை வளரச்செய்வது உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளமே.

**மீட்பின் வரலாற்றில் உறுதிப் பூசுதல் (பழைய ஏற்பாட்டில் தூய ஆவி)**

✝ ஆவி

ஆண்டவர் மேகத்தில் இறங்கி வந்து அவரோடு பேசினார். அவரில் இருந்த ஆவியில் கொஞ்சம் எடுத்து எழுபது மூப்பருக்கும் அளித்தார்.

(எண்ணிக்கை 11 : 25)

✝ கடவுளின் ஆவி

மண்ணுலகு உருவமற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது.

(தொ.நூ 1 : 2)

✝ தூய ஆவி

உமது முன்னிலையிலிருந்து என்னைத் தள்ளி விடாதேயும். உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும்.

(தி. பா 51 : 11)

**கிறிஸ்துவின் வாழ்வில் தூய ஆவியானவர்.**

வானதூதர் அவரிடம் தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்.

(லூக்கா 1 : 35)

ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, ''யோசேப்பே, தாவீதின் மகனே உம் மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான்''

(மத்தேயு 1 : 20)

இறைவன் தூய ஆவியை அளவின்றி இயேசுவில் பொழிந்துள்ளார். அதனால் இயேசுவுக்குப் புதுமைகள் செய்யவும் மறையைப் போதிக்கவும் சக்தி கிடைத்தது.

இயேசு திருமுழுக்குப் பெற்றவுடனே தண்ணீரை விட்டு வெளியேறினார். உடனே வானம் திறந்ததையும், கடவுளின் ஆவி, புறா இறங்குவது போலத் தம்மீது வருவதையும் அவர் கண்டார்.

(மத்தேயு 3 : 16 - 17)

தொடர்ந்து யோவான் சான்றாகக் கூறியது தூய ஆவி புறாவைப்போல வானிலிருந்து இறங்கி இவர் மீது இருந்ததைக் கண்டேன். இவர் யாரென்று எனக்குத் தெரியாதிருந்தது. ஆனால் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கும்படி என்னை அனுப்பியவர் தூய ஆவி இறங்கி யார் மீது இருப்பதைக் காண்பீரோ அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பவர் என்று என்னிடம் சொல்லியிருந்தார். நானும் கண்டேன். இவரே இறைமகன் எனச் சான்றும் கூறிவருகிறேன்.

(யோவான் 1 : 32 - 34)

கடவுளால் அனுப்பப் பெற்றவர் கடவுளின் வார்த்தைகளைப் பேசு கிறார். கடவுள் அவருக்குத் தம் ஆவிக்குரிய கொடைகளை அளவின்றிக் கொடுக்கிறார்.

(யோவான் 3 : 34)

**இயேசு திருத்தூதர்களுக்கு தூய ஆவியை வழங்குதல் (பாஸ்கா ஞாயிறு அன்று)**

*அவர் அவர்கள்மேல் ஊதி தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.*

(யோவான் 20 : 22)

*பாஸ்கா ஞாயிறு அன்று இயேசு திருத்தூதர்களுக்குத் தோன்றி தூய ஆவியால் அவர்களை தைரியப்படுத்தினார். இதுபோல் நாம் பெற்ற திருமுழுக்கினால் இயேசுவை நம்பவும் அவரைப் பறைசாற்றவும் எமது வாழ்விற்குத் தைரியம் கிடைக்கின்றது.*

**பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியின் வருகை**



14.2 *திருத்தூதர்கள் மீது தூய ஆவியின் வருகை*

*திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்.*

(திப 2 : 2 - 4)

**திருத்தூதர் பிறருக்கு தூய ஆவியை வழங்குதல்**

திருமுழுக்கையும் உறுதிப்பூசுதலையும் வழங்குவதற்குத் திருத்தூதர் இரண்டு முறைகளைப் பின்பற்றினர் என கீழே தரப்பட்டுள்ள விவிலியப் பகுதிகள் உறுதிப்படுத்துகின்றன.

சமாரியர் கடவுளின் வார்த்தையை ஏற்றுக் கொண்டனர் என்பதை எருசலேமிலுள்ள திருத்தூதர்கள் கேள்விப்பட்டு பேதுருவையும் யோவானையும் அவர்களிடம் அனுப்பி வந்தார்கள். அவர்கள் சென்று சமாரியர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுமாறு இறைவனிடம் வேண்டினார்கள். ஏனெனில் அதுவரை அவர்களுள் யாருக்கும் தூய ஆவி அருளப்படவில்லை. ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் அவர்கள் திருமுழுக்கு மட்டுமே பெற்றிருந்தார்கள். பின்பு பேதுருவும் யோவானும் தங்கள் கைகளை அவர்கள் மீது வைக்கவே அவர்கள் தூய ஆவியைப் பெற்றார்கள்.

(திப 8 : 14 - 17)

இதைக்கேட்ட மக்கள் ஆண்டவராகிய இயேசுவின் பெயரில் திருமுழுக்குப் பெற்றனர். பவுல் அவர்கள் மீது கைகளை வைத்ததும் தூய ஆவி அவர்கள் மேல் இறங்கியது. அப்பொழுது அவர்கள் பரவசப்பேச்சுப் பேசினர். இறைவாக்கும் உரைத்தனர்.

(திப 19 : 5 - 6)

சாவுக்கு அழைத்துச் செல்லும் செயல்களில் இருந்து மனமாற்றம் கடவுள்மீது நம்பிக்கை, முழுக்குகள், கையமர்த்தல் பற்றிய படிப்பினை, இறந்தோரின் உயிர்ப்பு என்றும் நிலைக்கும் தீர்ப்பு ஆகிய தொடக்கநிலைப் படிப்பினைகளைக் கற்பித்து மீண்டும் அடித்தளம் இடத் தேவையில்லை

(எபி 6 : 2)

நீங்கள் தூய ஆவியைப் பெற்றுக் கொள்ள இருப்பதனால் தினமும் தூய ஆவியானவரிடம் செபிப்பதோடு எப்பொழுதும் தூய ஆவியின் உதவியை நாடுங்கள். உங்கள் வாழ்வில் தூய ஆவியை அனுபவியுங்கள். செபிப்பதன் மூலம் தூய ஆவியின் கொடைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். உறுதிப்பூசுதல் பெறுவதன் மூலம் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக மாற்றமடைவோம்.

**செயற்பாடு**

1. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட திருத்தூதர்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள் எவை ?

2. தூய ஆவியின் வரம்வேண்டி ஒரு செபம் எழுதுக.

**வாழ்க்கைக்கு**

தூய ஆவியானவரின் வரம் வேண்டி செபியுங்கள்.

# 15

# உறுதிப்பூசுதல்

கிறிஸ்தவனாக வாழும்போது நம்பிக்கைக்கு எதிராக வரும் சவால்களுக்கும் கஷ்டங்களுக்கும் தைரியமாக முகங்கொடுத்து அவற்றை வெற்றிகொள்ளத் தேவையான சக்தியை உறுதிப்பூசுதல் மூலம் பெறுகின்றோம். அச்சக்தியானது தூய ஆவியின் விசேட செயற்பாட்டின் பிரதிபலிப்பே ஆகும். தூய ஆவியின் கொடைகளைப் பெறுவதற்கு நாம் தகுந்த ஆயத்தத்துடன் உறுதிப் பூசுதல் எனும் அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## உறுதிப் பூசுதல் அருளடையாளத்தைப் பெறுவதற்குத் தேவையான தகுதிகள்

1. திருமுழுக்குப் பெற்றிருத்தல்.
2. 14 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்.
3. அருள் நிலையில் இருத்தல் (பாவத்திலிருந்து விடுபடல். அதற்காக ஒப்புரவு அருளடையாளத்தைத் பெறல்)
4. முறைப்படி மறைக் கல்வியைப் பெற்றிருத்தல்.
5. இவ்வருளடையாளத்தைப் பெற விருப்பமும், அதற்கான முயற்சியும் இருத்தல்.

## உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெறுவோருக்குக் கிடைக்கும் கொடைகள்

† இறைவனை அப்பா பிதாவே என அழைப்பதற்கான தகுதியைப் பெறுகிறோம்.

† கிறிஸ்துவுடன் மிக ஆழமாக தொடர்பு கொள்ள முடிகிறது.

† தூய ஆவியின் கொடைகள் வளர்ச்சியடைகின்றது.

† திருச்சபையுடன் முழு உறவு கொள்ள முடிகிறது.

† முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனாகவும், கிறிஸ்துவின் உண்மையான சாட்சியாக வாழவும், சொல்லாலும் செயலாலும் நம்பிக்கையை (விசுவாசம்) வளர்க்கவும் பாதுகாக்கவும் தூய ஆவியின் சக்தி கிடைக்கிறது.

† ஆன்மாவில் அழியாத முத்திரை பதிக்கப்படுகிறது.

**ஞானம்** :- தன்வாழ்வுக்கு தேவையானதையும் தேவையற்றதையும் தெரிந்து கொள்ள வழங்கப்படும் திருக்கொடை.

**புத்தி** :- இறைத்தந்தை பார்ப்பது போல் அனைத்து நிகழ்வுகளையும் பார்க்க அவற்றில் இறைத்தந்தை செயற்படுவதை உய்துணர வழங்கப்படும் திருக்கொடை.

**அறிவு** :- தான் வாழும் சூழ் நிலையை நன்றாக அறிய அதில் இறைத்தந்தையை கண்டு மகிழ வழங்கப்படும் திருக்கொடை.

**திடம்** :- துன்பங்கள் மத்தியிலும் இறைத்தந்தையின் திருவளத்தை துணிவுடன் நிறைவேற்ற வழங்கப்படும் திருக்கொடை.

**விமரிசை** :- நல்லவற்றை கடைபிடிக்க தீயவற்றை முற்றாக விலக்க வழங்கப்படும் திருக்கொடை.

**பக்தி** :- இறைத்தந்தை மீது பற்றுறுதி கொண்டு அவருக்குத் தன்னை முற்றிலும் கையளிக்க வழங்கப்படும் திருக்கொடை.

**தேவபயம்** :- தனது தவறுகளால் இறைத்தந்தையின் அன்பிலிருந்து விலகிப் போகாமல் இருக்க வழங்கப்படும் திருக்கொடை.

**தூய ஆவியின் கனிகள் 12**

| | | |
|---|---|---|
| 1. பரம அன்பு | 5. இரக்கம் | 9. விசுவாசம் |
| 2. மகிழ்ச்சி | 6. நன்னயம் | 10. அடக்க ஒடுக்கம் |
| 3. அமைதி | 7. சகிப்பு | 11. இச்சையடக்கம் |
| 4. பொறுமை | 8. சாந்தம் | 12. நிறைகற்பு |

**உறுதிப் பூசுதல் பெற்றவரின் கடமைகள்**

1. தமது விசுவாசத்தை ஆழப்படுத்திக்கொள்ள இறைவனைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளல்.
2. கிறிஸ்துவில் நிலையான அன்பை வளர்த்து அவ்வாறு வாழ்தல்.
3. தேவையான சந்தர்ப்பத்தில் கிறிஸ்துவின் அன்பிற்காகத் துணிந்து நின்று சான்று பகர்தல்.
4. கிறிஸ்துவுடன் ஒன்றிணைந்து உலகைத் தூய்மைப்படுத்த முயற்சி செய்தல்
5. முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக
   i. வார்த்தையினால் சான்றுபகர்தல்.
   ii. செயலினால் சான்றுபகர்தல்.

**உறுதிப்பூசுதலை வழங்குபவர்**

1. சாதாரணமாக உறுதிப்பூசுதலை ஆயரே நிறைவேற்றுவார்.
2. வளர்ந்தோருக்கான திருமுழுக்கின்போது குருவானவரே உறுதிப்பூசுதலையும் வழங்குவார்.
3. ஆயரால் விசேட அனுமதிபெற்ற குருவினால் இவ் அருளடையாளம் நிறைவேற்றப்படும்.
4. மரணத்தறுவாயில் இருக்கும் ஒருவருக்கு கத்தோலிக்கக் குருவினால் இவ்வருள டையாளத்தை வழங்க அனுமதி உண்டு.

**செயற்பாடு**

1. உறுதிப்பூசுதலைப் பெறுவதற்குத் தேவையான தகுதிகள் ஐந்தினை எழுதுக.

2. தூய ஆவியின் ஏழு கொடைகளையும் பெயரிடுக.

**வாழ்க்கைக்கு**

திருச்சபையின் முதிர்ச்சி பெற்ற உறுப்பினராக எப்போதும் பிறருக்கு முன்மாதிரியாக வாழ முயற்சி செய்வோம்.

# 16 உறுதிப்பூசுதல் வழங்கும் சடங்கு



16.1 உறுதிப்பூசுதல் வழங்குதல்

இப்படத்தில் உங்கள் அவதானத்தைச் செலுத்தி நீங்கள் பங்குபற்றிய உறுதிப் பூசுதல் வழங்கும் சடங்கு ஒன்றினை நினைவிற் கொள்ளவும்.

முன்னைய பாடங்களில் நீங்கள் உறுதிப்பூசுதலையும் அதைப் பெறத் தேவையான தகுதிகள் பற்றியும் உறுதிப்பூசுதல் பெறுவதால் கிடைக்கும் கொடைகள் கனிகள் பற்றியும் கற்றுக்கொண்டீர்கள். இப்பாடத்தின் மூலம் ''உறுதிப்பூசுதல் வழங்கும் முக்கிய சடங்கு'' பற்றி கற்றுக்கொள்ள முடியும்.

## உறுதிப்பூசுதல் வழங்கும் திருப்பலி

### ஆரம்ப வழிபாடு

உறுதிப்பூசுதல் பெற இருப்போர் முன்னால் செல்ல, ஆயரும் ஏனையோரும் பவனியாக ஆலயத்திற்குள் செல்வார்கள். ஞாயிறு திருப்பலியைப் போல ஆரம்ப வழிபாடு நடைபெறும்.

### இறைவார்த்தை வழிபாடு

முதலாம் வாசகம், பதிலுரைப்பாடல், இரண்டாம் வாசகம், அல்லேலுயா புகழ்கீதம், நற்செய்தி வாசகம் ஆகியவை இடம்பெறும். இறைவார்த்தையினால் உறுதிப்பூசுதல் பெற இருப்போரும் திருப்பலியில் பங்கு கொள்ளும் அனைவரும் ஊட்டம்பெறும் வகையில் மறையுரை நிகழ்த்தப்படும்.

### உறுதிப்பூசுதல் பெற இருப்போரை அழைத்தல்

தமது பங்கில் உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெற ஆயத்தமான பிள்ளைகளுக்குப் பங்குத் தந்தை உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை வழங்குமாறு ஆயரிடம் கேட்பார். அப்பிள்ளைகள் அதற்காகத் தகுந்த முறையில் ஆயத்தமா கியுள்ளனரா? தகுதி பெற்றவரா? என ஆயர், பங்குத் தந்தையிடம் வினவுவார். பங்குத் தந்தை பதிலளித்த பின்னர் ஆயர், அவர்கள் தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளனர் என அறிவிப்பார். இதன் பின்னர் திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பிக்கப்படும்.

### திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பிக்கப்படல்

தீமையை விட்டு விலகி நம்பிக்கையின் சக்திவாய்ந்த சாட்சிகளாக கிறிஸ்தவ அழைப்பில் வாழ்வதற்குப் பெற்றோரும், ஞானப் பெற்றோரும் திருமுழுக்கின்போது கொடுத்த வாக்குறுதி, பிள்ளைகளால் இங்கு சுய விருப்புடன் புதுபிக்கப்படுகிறது. உறுதிப்பூசுதல் பெறுபவர் கிறிஸ்தவ அழைப்பில் வாழ்வதற்கு உறுதியளிப்பார். அதன் பின் ஆயர் தூய ஆவியின் வரம் வேண்டி செபிப்பார்.

**ஆயர் உறுதிப்பூசுதல் பெறுவோர் தலை மீது கைகளை வைத்து தூய ஆவியின் வரம் வேண்டி செபிப்பார்.**

*இச்செயல் வழிபாட்டில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பாவம் கழுவப்பட்டு நீரினாலும் ஆவியினாலும் புதுவாழ்வைப் பெற்றுத்தந்த இறைவன் தேற்றரவாளரான தூய ஆவியைப் பிள்ளைகள் மீது பொழிய வரம்வேண்டி பின்வருமாறு செபிப்பார். துணையாளராகிய தூய ஆவியாரை இவர்களுக்குள் அனுப்பியருளும்: ஞானமும், மெய்யுணர்வும் தரும் ஆவியாரை, ஆலோசனையும் வல்லமையும் தரும் ஆவியாரை அறிவும், பக்தியும் தரும் ஆவியாரை இவர்களுக்கு அளித்தருளும் தெய்வ பயத்தின் ஆவியாரால் இவர்களை நிரப்பியருளும்.*

**கிறிஸ்மா தைலம் பூசுதல்**

*ஆயர் உறுதிப்பூசுதல் பெறுவோரின் நெற்றியில் கிறிஸ்மா தைலத்தைப் பூசுவார். இச் சந்தர்ப்பத்தில் ஞானப் பெற்றோர் உறுதிப்பூசுதல் பெறுவோரின் தோள்மீது கைகளை வைப்பார். ஆயர் ''தூய ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொள்'' என கூறி ஒவ்வொருவரின் நெற்றியிலும் கிறிஸ்மா தைலத்தால் அபிஷேகம் செய்வார். இது உறுதிப்பூசுதல் அருளடையாளம் வழங்குவதின் வெளி அடையாளமாகும்.*

*இதன் மூலம் ஆன்மாவின் அழியாத முத்திரை பதிக்கப்படுவதுடன் கிறிஸ்துவின் போர் வீரர்களாகிறோம். கிறிஸ்மா தைலம் பூசப்பட்ட பின், ஆயர் கன்னத்தில் அல்லது தோளில் தட்டுவார். தாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு முகங்கொடுத்து மறைப்பணியில் ஈடுபட கடமைப்பட்டுள்ளனர் என்பதை இது குறிக்கிறது.*

**விசுவாசிகளின் மன்றாட்டு**

*உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை அர்த்தத்துடன் பெற்று முதிர்ச்சி பெற்ற வாழ்க்கைக்குள் நுழையும் அனைவருக்காகவும் இறை ஆசிரை வேண்டி மன்றாடப்படுகிறது.*

**காணிக்கை ஒப்புக்கொடுத்தல்**

உறுதிப்பூசுதல் பெற்ற அனைவரும் தமது வாழ்வை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து காணிக்கைப் பவனியில் பங்கு பெறுவர்.

**செயற்பாடு**

1. உறுதிப்பூசுதல் சடங்கு முறையை உள்ளடக்கிய புத்தகமொன்றை தயாரிக்குக.


**வாழ்க்கைக்கு**

உறுதிப்பூசுதல் பெறும் சடங்கில் பங்குகொள்வோம்.

# 17 ஒரே இறைவனை மட்டும் ஆராதிப்பாயாக

> நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்.
>
> மத்தேயு 28:19

மேலேயுள்ள திருவிவிலிய வசனத்தை வாசித்து கீழேயுள்ள படங்களைப் பெயரிடுக.



ஒரு நாள் தூய அகுஸ்தினார் கடற்கரையில் உலாவிக் கொண்டு தூய திரித்துவத்தின் மறை பொருளைப் புரிந்து கொள்ள முயற்சித்தார். அச்சந்தர்ப்பத்தில் கடற்கரையில் ஒரு சிறுவன் அவசர அவசரமாக ஒரு சிப்பியினால் கடல்நீரை அள்ளி

கடற்கரையிலுள்ள சிறு குழியில் ஊற்றுவதை தூய அகுஸ்தினார் கண்டார். அவர் சிறுவனிடம் ''பிள்ளாய் நீ என்ன செய்கிறாய்'' என்று கேட்டார். அதற்கு அச் சிறுவன் ''நான் இந்தக் கடலில் உள்ள நீர் முழுவதையும் இக்குழியில் நிரப்ப முயற்சி செய்கிறேன்'' எனப் பதில் கூறினான். தூய அகுஸ்தினார் மறுமொழியாக ''இதை உன்னால் செய்ய முடியுமா? இந்தப் பெரிய சமுத்திரத்திலுள்ள நீரை சிறிய குழியில் ஊற்ற முடியுமா? எனக் கூறி சிரித்தார். அதற்கு சிறுவன் ''நீர் சிந்திப்பதும் அத்தகையதே. உம்மால் இந்த மறைபொருளை புரிந்து கொள்வது கடினமானது'' எனக் கூறி மறைந்துவிட்டான். மூவொரு இறைவனின் அதி உன்னத மறையுண்மையைப் பற்றி புரிந்துகொள்ளல் எமது புத்திக்கு அப்பாற்பட்ட விடயமாகும்.

## திருவிவிலியத்தில் இறை ஆராதனை

பின்பு அலகை அவரை அழைத்துச் சென்று உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவருக்குக் காட்டி, அவரிடம், 'இவற்றின் மேல் முழு அதிகாரத்தையும் இவற்றின் மேன்மையையும் உமக்குக் கொடுப்பேன். நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவையாகும்' என்றது. இயேசு அதனிடம் மறுமொழியாக, 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக' என்று மறைநூலில் எழுதியுள்ளது' என்றார்.

(லூக். 4:5 - 8)

இத் திருவிவிலிய வசனத்தினால் கிறிஸ்து எமக்குக் கூறுவது இறைவார்த்தையை நன்றாக விளங்கி இறைவனுக்கு ஆராதனை செய்ய வேண்டும் எனவும் அதிகாரத்துக்கும் சொத்துக்கும் அடிமையாகாமல் ஒரே எதிர்நோக்குடன் ஒரே இறைவனுக்கு மட்டும் ஆராதனை செலுத்த வேண்டுமென ஆணித்தரமாகக் கூறுகிறார்.

என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. மேலே விண்வெளியின் கீழே மண்ணுலகில் பூமிக்கு அடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றுக்குப் பணிவிடை புரியவோ வேண்டாம்.

(வி ப 20 : 3 - 5)

எனவே கத்தோலிக்கராகிய நாம் அனைவரும் மூவொரு இறைவனுக்கு மட்டுமே ஆராதனை செய்ய வேண்டும். ஒரே இறைவன் மூன்று ஆட்களாக இருக்கிறார். இது கத்தோலிக்க விசுவாசம் ஆகும். ஒரே கடவுள் மூன்று ஆட்களாய் இருக்கிறார் என்ற மறை உண்மை விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை உண்மையாக இருப்பது மூவொரு கடவுளின் மறைபொருளே. இறைமகன் மனுவுரு எடுத்து மனிதருக்கு இறையன்பை வெளிப்படுத்தினார். கிறிஸ்துவுக்குப் பின் தந்தையால் தூய ஆவியானவர் அனுப்பப்பட்டார். ஆதலால் தூய ஆவியானவர் தந்தை மகனோடு ஆராதனையும் மகிமையும் பெறுகிறார்.

**மூவொரு கடவுளின் செயற்பாடு**

தந்தை, மகன், தூய ஆவிக்கு வெவ்வேறு செயற்பாடுகள் உள்ளன.

**தந்தையின் செயற்பாடு**

தந்தை உலகைப் படைத்து அதைப் பராமரித்துப் பாதுகாக்கின்றார். தொடக்க நூலில் படைப்பின் கதையில் இது தெளிவாகிறது.

கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன.

தொ. நூல் 1:31

முழு உலகையும் ஆட்சி செய்பவர் அவரே,

**மகனின் செயற்பாடு**

உலகை மீட்பது மகனின் பொறுப்பாகும். மனிதனின் கீழ்ப்படியாமை என்னும் பாவத்திலிருந்து அவனை மீட்பதற்காக கிறிஸ்து இறைவனின் திட்டப்படி இவ்வுலகிற்கு வந்தார். தமது பாடுகள், மரணம், உயிர்ப்பின் மூலம் மனிதனைப் பாவத்திலிருந்து மீட்டார். இதனால் எமக்கு பாவ மன்னிப்புக் கிடைத்தது.

**தூய ஆவியின் செயற்பாடு**

உலகைப் புனிதப்படுத்துவது தூய ஆவியின் செயலாகும். திருமுழுக்குப் பெற்ற அனைவரிடமும் தூய ஆவியானவர் செயலாற்றிப் புனிதப்படுத்துகிறார். திருமுழுக்கினால் தூய ஆவியானவர் நம் உள்ளத்தில் வாழ வருகிறார். ஆதலால் நாம் தூய ஆவியானவர் வாழும் ஆலயமாகிறோம்.

**மூவொரு கடவுளும் திருமுழுக்கும்**

நாம் மூவொரு கடவுளின் பெயரால் திருமுழுக்குப் பெற்றோம். (பெயர்) தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் நான் உனக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன். (கழுவுகிறேன்) எனக் கூறித் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. அதேபோல் திருமுழுக்கு வாக்குறுதி மூலமும் மூவொரு கடவுளில் நம்பிக்கை வைப்பதாக உமக்குப் பதிலாக பெற்றோரும் ஞானப்பெற்றோரும் வாக்குறுதி கொடுத்தார்கள்.

குரு : விண்ணையும் மண்ணையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனை நம்புகிறீர்களா?

**எல்லோரும் :** ஆம் நம்புகிறேன்.

குரு : அவருடைய ஒரே மகனும் கன்னிமரியிடமிருந்து பிறந்து, பாடுபட்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டு இறந்தோரில் நின்று உயிர்த்தெழுந்து, தந்தையின் வலப்பக்கம் வீற்றிருப்பவருமான நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகிறீர்களா?

**எல்லோரும் :** ஆம் நம்புகிறேன்.

குரு : தூய ஆவியையும் தூய கத்தோலிக்க திருச்சபையையும் புனிதர்களின் சமூக உறவையும் பாவமன்னிப்பையும் உடலின் உயிர்ப்பையும், முடிவில்லா வாழ்வையும் நம்புகிறீர்களா?

**எல்லோரும் :** ஆம் நம்புகிறேன்.

இவ்வாக்குறுதியின் மூலம் மூவொரு கடவுளில் நம்பிக்கை வைக்கிறோம் என்பது தெளிவாகிறது.

## மூவொரு கடவுளும் குடும்பமும்

மூவொரு இறைவனின் வெளியடையாளமாக கிறிஸ்தவ குடும்பம் விளங்குகிறது. தந்தை மகன் தூய ஆவியின் அன்புறவை கிறிஸ்தவ குடும்பம் பிரதிபலிக்கின்றது. குழந்தைப்பேறும் அதனைப் பேணி வளர்ப்பதும் தந்தையின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது. கிறிஸ்தவ குடும்பம் தினமும் செபிப்பதனாலும், திருப்பலியில் பங்கு கொள்வதாலும், இறைவார்த்தையை வாசித்துத் தியானிப்பதாலும் மூவொரு கடவுளின் அன்புறவை நமக்குள் பலப்படுத்துகிறது. நற்செய்தி அறிவிப்பும் மறைத்தூதுப் பணியும் கிறிஸ்தவ குடும்பத்தின் கடமையாக உள்ளது.

க.தி.ம 2205

## குடும்பங்களின் பணிகள்

மூவொரு கடவுளின் பணியைப்போல் குடும்பங்களில் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய வெவ்வேறு பணிகளும் உள்ளன. கிறிஸ்தவ குடும்பங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் கிறிஸ்துவைப் போல் பிறருக்கு அன்பு செய்து வாழ வேண்டும். மூவொரு கடவுளைப் போல் பிரிக்கமுடியாத அன்பின் குடும்பமாக வாழ வேண்டும். மூன்று ஆட்களாக இருந்தாலும் ஒரே இறைவனாகச் செயற்படுவது போல் குடும்பத்திலும் தமக்கிடையே ஒருமைப்பாடு, ஒத்துழைப்பு, சமாதானம்

உருவாக்கப்பட வேண்டும். இவ்வுலகில் மூவொரு கடவுளின் அடையாளமாக கிறிஸ்தவ குடும்பம் மிளிர வேண்டும்.

**செயற்பாடு**

1. தந்தை, மகன், தூய ஆவியின் செயல்களை வெவ்வேறாக எழுதுக.
2. தூய திரித்துவத்தின் மறைபொருளை சுருக்கமாக எழுதுக.
3. குடும்பத்தில் மூவொரு கடவுளின் அன்பை வெளிப்படுத்தக் கூடிய சிறிய கதையொன்றை எழுதுக.

**வாழ்க்கைக்கு**

ஒரே இறைவனை மட்டும் ஆராதிப்போம்.

18

# ஒரே இறைவனில் நம்பிக்கை வாழ்வு

அந்தியோக்கு எப்பிபானின் ஆட்சியின் போது அந்நியரின் வழிபாடுகளைச் செய்வதற்கு தாயையும் ஏழு பிள்ளைகளையும் வற்புறுத்தினான். ஆனால் ஒரே கடவுளில் நம்பிக்கை வைத்திருந்த அவர்கள் அவ்வழிபாடுகளில் ஈடுபட மறுத்தனர். அதனால் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அம்மரணத்தை எதிர்கொண்ட தாய் தம் பிள்ளைகளைத் தைரியப்படுத்தினாள். ''ஒன்பது மாதம் உன்னை என் வயிற்றில் சுமந்தேன். மூன்று ஆண்டு உனக்குப் பாலூட்டி வளர்த்தேன். இந்த வயது வரை உன்னைப் பேணிக் காத்து வந்துள்ளேன். நீ கடவுளுக்குச் சொந்தமானவன். ஆதலால் அஞ்சாதே! சாவை ஏற்றுக் கொள். ஏனெனில், இறுதித் தீர்ப்பின்போது நாம் இறைவனை சந்திப்போம்.'' என்று கூறி ஊக்க மூட்டினார்.

(2 மக்கபேயர் 7 அதி)

இக்கதையை மேலுள்ள வேதாகமப் பகுதியில் வாசித்து இன்னும் விபரமாக விளங்கிக் கொள்ளவும். மூட நம்பிக்கைக்கு அடிமையாகக் கூடாது எனவும், அதனால் வரும் சவால்களை எதிர்கொள்ள சக்தியை இறைவன் தருவாரென்பதும் இதனால் வெளிப்படுத்தப்படுகிறது. மூடநம்பிக்கை இறைவனுக்கு விருப்பமான செயல் அல்ல. இது முதலாம் கட்டளைக்கு எதிரானது. திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களாகிய நாம் மூடநம்பிக்கையிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

**திருவிலியத்தில் சிலை வழிபாடு குறித்து எச்சரிக்கை**

நீங்கள் சென்று விரட்டியடிக்கும் மக்களினங்களை உங்கள் கடவுளாகிய ஆண்டவர் வேரறுப்பார். நீங்கள் அவர்களை விரட்டியடித்து விட்டு அவர்களது நாட்டில் குடியேறுங்கள். உங்கள் முன்னிலையில் அவர்கள் முறியடிக்கப்பட்ட பின், அவர்களைப் பின்பற்றி வஞ்சிக்கப்படாதபடியும் இந்த மக்களினங்கள் தங்கள் தெய்வங்களுக்கு எப்படி ஊழியம் செய்தனவோ, அவ்விதமே நாங்களும் செய்வோம் என்று சொல்லி அவர்களின் தெய்வங்களைப் பற்றிக் கேட்டறியாதபடியும் கவனமாய் இருங்கள். உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அவர்களது முறைப்படி செய்ய வேண்டாம். ஏனெனில் ஆண்டவர் வெறுக்கும் எல்லா அருவருப்பானவற்றையும் அவர்களுடைய தெய்வங்களுக்கு அவர்கள் செய்தார்கள். தங்கள் புதல்வரையும் புதல்வியரையும் கூட அவர்களின் தெய்வங்களுக்கென நெருப்பில் சுட்டெரித்தார்கள்.

இச. 12 : 29 - 31

இப்பகுதியில் இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கை நாட்டில் வாழ வேண்டிய முறையைப் பற்றியும் கானானியரின் மூட நம்பிக்கையிலிருந்து விலகி இருக்குமாறும் இறைவன் எச்சரிக்கிறார்.

மானிடா இம்மனிதர் சிலைகளிடம் தங்கள் மனத்தைப் பறிகொடுத்து அவற்றைத் தங்கள் முன் எழுப்பும் தீச்செயலில் ஈடுபட்ருக்கின்றார்கள். இவர்கள் என் திருவுளத்தை அறிய நான் விடுவேனோ? ஆகையால் நீ அவர்களோடு பேசி அவர்களிடம் சொல் தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே. இஸ்ரயேல் வீட்டாருள் எவராவது சிலைகளிடம் தங்கள் மனத்தைப்பறி கொடுத்து அவற்றைத் தங்கள் முன் எழுப்பும் தீச்செயலில் ஈடுபட்டுக் கொண்டே இறைவாக்கினரிடம் வந்தால் அவர்களுக்கு ஆண்டவராகிய நானே அவர்களின் எண்ணற்ற சிலைகளுக்கேற்ப பதில் அளிப்பேன். இவ்வாறு சிலைகளால் என்னை விட்டு விலகிப்போயிருக்கும் இஸ்ரயேல் வீட்டாரின் இதயங்கள் அனைத்தையும் நான் என் வயமாக்கிக் கொள்வேன்.

எசேக்கியேல் 14 : 3 - 6

மூடநம்பிக்கையை இறைவன் வெறுக்கிறார் என்பது இதனால் எடுத்துக் காட்டப்படுகிறது. இறைவன் வெறுக்கும் செயல்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். உண்மையான ஒரே இறைவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும். இஸ்ரயேலர் மூட நம்பிக்கையைப் பின்பற்றியதாலேயே பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.

சிலைகள் பக்கம் திரும்ப வேண்டாம் உங்களுக்கெனத் தெய்வப் படிமங்களை வார்த்துக் கொள்ள வேண்டாம். நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்.

(லேவியர் 19 : 4)

வேறு மதத்தினர் பயன்படுத்தும் சிலைகளை இறைவன் வெறுக்கிறார் என்பதை இப்பகுதி வெளிப்படுத்துகிறது.

உங்கள் நடுவில் ஓர் இறைவாக்கினன் அல்லது கனவு காண்பவன் தோன்றி உங்களிடையே ஓர் அடையாளம் அல்லது அருஞ்செயல் காட்டுவேன் என்று சொல்லலாம். அவன் சொல்வதுபோல் அடையாளம் அல்லது அருஞ்செயல் நடக்கலாம். அதன்பின் அவன் வாருங்கள் வேற்றுத் தெய்வங்களைப் பின்பற்றி அவற்றிற்கு ஊழியம் புரிவோம், என்று கூறலாம். அவை நீங்கள் அறியாதவை. அந்த இறைவாக்கினன் அல்லது கனவு காண்பவனின் சொற்களுக்குச் செவிகொடுக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் மீது நீங்கள் முழு இதயத்தோடும் உள்ளத்தோடும் அன்பு கூர்கின்றீர்களா என்று அவர் உங்களைச் சோதிக்கின்றார். உங்கள் கடவுளாகிய ஆண்டவரைப் பின்பற்றி அவருக்கு அஞ்சி அவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர் குரலுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு ஊழியம் செய்து அவரைப் பற்றிக் கொள்ளுங்கள்.

(இச. 13 : 1- 4)

மேற்கூறப்பட்ட இறைவார்த்தையின்படி போலி இறைவாக்கினர் அல்லது கனவு காண்பவன் கூறும் வார்த்தைகளுக்குச் செவிமடுக்க வேண்டாம். முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் இறைவனுக்கு மட்டும் அஞ்ச வேண்டும். அவர் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர் குரலுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு ஊழியம் புரிந்து அன்பு செய்ய வேண்டும்.

சிலை வழிபாடு சிலைகள் வழிபடுவது மட்டுமன்று நம்பிக்கைக்கு எதிராக நாம் தினமும் மேற்கொள்ளும் செயற்பாடுகளிலும் தங்கியுள்ளது. பணம், அதிகாரம், சொத்துப்போன்ற லௌகீக தேவைகளுக்கு இறைவனுக்குரிய மரியாதையைக் கொடுப்பது தகுதியற்ற செயலாகும். இறைவனுக்கும் லௌகீக தேவைகளுக்கும் ஒரே விதமான அன்பை செலுத்த முடியும். மறை சாட்சியரில் அநேகமானோர் மிருகங்களுக்கு ஆராதனை செய்ய மறுத்ததாலும் அவ்வாராதனையை ஏற்காததாலும் உயிர்த் தியாகம் செய்தனர். சிலைவழிபாட்டினால் இறைவனின் உன்னத தலைமைத்துவம் மறுக்கப்படுகிறது.

கத்தோலிக்க நம்பிக்கையின் படி நல்ல நேரம் பார்த்தல், சோதிடம் பார்த்தல், சகுனம் பார்த்தல், மந்திரம், சூனியம் செய்தல், எலுமிச்சைக்காய் வெட்டுதல் போன்றவை மூட நம்பிக்கைகளாகும். செல்வம், அதிகாரம், நல்வாழ்க்கை, சாதி, பரம்பரை, நாடு, பணமுதலீடு இவ்வாறானவைகளுக்கு அடிமையாதலும் மூட நம்பிக்கையாகும். இறைவனுக்குரிய இடத்தை இவ்வுலகை சார்ந்தவற்றுக்கும் வேறு நம்பிக்கைகளுக்கும் கொடுக்கக் கூடாது. பிற தெய்வங்களுக்குப் பின்னால் செல்லும் பொய் இறைவாக்கினரின் அருஞ்செயல் அல்லது அடையாளம் என்பனவற்றுக்கு ஏமாற வேண்டாம், என இறைவன் அறிவுரை கூறியுள்ளார்.

**இறைவனுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளச் செய்ய வேண்டியவை**

1. ஒரே இறைவனை மட்டும் ஆராதித்தல்.
2. ஒரே இறை வழிபாட்டால் இறை உறவை வளர்த்தல்.
3. மூட நம்பிக்கையிலிருந்து விலகி பிறரையும் அதிலிருந்து காப்பாற்றுதல்.
4. இறைவனில் சார்ந்திருந்து வாழ்வின் சவால்களுக்கு முகங்கொடுத்தல்.
5. பிசாசு, ஆவிகளில் நம்பிக்கை வைக்காதிருத்தல்.
6. இவ்வுலகிலுள்ள அனைத்தும் இறைவன் முன்னிலையில் தூசியென ஏற்றுக் கொள்ளல்.

## செயற்பாடு

1. ஒரே இறைவனை ஆராதிக்கச் செய்ய வேண்டியவை பற்றி ஐந்து விடயங்கள் தருக.

2. அன்றாட வாழ்வில் நீர் விலக்க வேண்டிய மூடநம்பிக்கைச் செயல்கள் ஐந்து தருக.

3. " **மூடநம்பிக்கையை எதிர்ப்போம்** " என்ற தலைப்பில் போஸ்டர் ஒன்றை தயாரிக்குக.

## வாழ்க்கைக்கு

மூட நம்பிக்கையிலிருந்து விலகி ஒரே இறைவனில் நம்பிக்கை வைப்போம்.

# 19 தூயோர் வணக்கம்



19.1 தூய அந்தோனியார்

1. பதுவை நகர் தூய அந்தோனியார் தொடர்பாக நீர் அறிந்த மூன்று விடயங்களை எழுதுக.

2. அவருடைய வாழ்விலிருந்து உமது வாழ்க்கைக்குக் கிடைக்கக் கூடிய மிகச் சிறந்த முன்மாதிரிகை யாது?

சிலை வழிபாடு என்பது; ஒரு நபர் அல்லது சிலை அல்லது உலக செல்வம் என்பவற்றில் இறைத்தன்மை இருப்பதாகக் கருதி நம்பிக்கை வைத்து

வழிபடுவதாகும். திருச்சுரூபமானது அது தொடர்பான ஒருவரை எமது ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறது. மேலும் புதுமை செய்யும் ஆற்றல் அவற்றிற்கு உண்டு என நம்பக் கூடாது என்பதாகும். சுரூபங்கள், வரவணிக்கம் என்பன இறை ஆசீருடன் புனிதமாக்கப்படுகின்றன. அவற்றை மரியாதை வணக்கத்துடன் பயன்படுத்த வேண்டும். புனிதர்கள் தமது வாழ்நாள் முழுவதும் இறைவனுக்குச் சான்று பகர்ந்து வாழ்ந்து இறந்தவர்கள். திருச்சுரூபங்களுக்கு அல்லது படங்களுக்கு வணக்கம் செலுத்துவது அதனைக் குறிக்கும் புனிதருக்கு வணக்கம் செலுத்துவதாகும்.

திருச்சுரூப வணக்கத்தின் நோக்கம் அது தொடர்பான புனிதர்களை நினைவு கூர்தலாகும். இறைவனோடு நட்புறவுகொண்ட ஒருவருக்கு வணக்கம் செலுத்துவது இறைவனுக்குச் செலுத்தப்படும் வழிபாடாகும் என்பதில் நம்பிக்கை கொள்ள வேண்டும். புனிதர்களது முன்மாதிரிகையான வாழ்வை முன்னிட்டே அவர்களுக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. ஆகவே அவர்களூடாகச் செபிப்பதன் மூலம் திருப்பண்டங்களுக்கும் திருச்சுரூபங்களுக்கும் வணக்கம் செலுத்துவோம். அவர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றி எமது வாழ்வைக் கட்டியெழுப்புவோம்.

‘‘அவரது ஆடையைத் தொட்டால் எனது நோய் குணமாகும்’’ என ஆண்டவர் இயேசுவின் மேலாடையைத் தொட்ட பெண் நம்பிக்கை கொண்டாள். இயேசுவின் மேலாடையை ஒரு புனித பொருளாக அவள் கருதியமையே இந்நிகழ்ச்சியின் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டிலும் உருவங்கள் பயன்படுத்தப்பட்டன. கெருபும் (தேவ தூதர் விப. 25:18-22) உடன்படிக்கைப் பேழையை அழகுபடுத்த செய்யப்பட்ட உருவம் வெண்கலப் பாம்பு (எண். 21: 8-9) பாம்பினால் தீண்டப்பட்டவர்கள் சுகம் பெறுபவதற்காக செய்யப்பட்டது. இவை இறைவனின் அறிவுரைக்கமையவே மேற்கொள்ளப்பட்டன.

*நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக்கொள்ளமாட்டேன்; என்னைப் புறக்கணிக்கும் மூதாதையாரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்.*

(விப. 20:4-5)

இறைவன் எதிரிகள் மட்டில் பொறுமையற்றவர். இங்கு எதிரிகள் எனப்படுவது வேறு தெய்வங்களாகும். புனிதர்கள் வேறு தெய்வங்களாகக் கருதப்படுவதில்லை. எனவே அவர்கள் இறைவனின் எதிரிகள் அல்ல நண்பர்களாவர். தூயோர் கத்தோலிக்கராகிய எமக்கு முன்மாதிரியானவர்கள். தூயோரை, திருப்பண்டங்களை, புனித இடங்களை அவமதிப்பது அல்லது அவற்றின் மட்டில் அவமரியாதையுடன் நடந்துகொள்வது பாவமாகும். தூயோர் விண்ணக பேரின்பத்தை உரிமையாக்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் இறைவன் முன்னிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் எமக்காக செபிக்கின்றார்கள்.

## தூயோரின் வழிகாட்டலுக்கு ஏற்ப நீங்கள் செய்ய வேண்டியவை

- ✝ வாழ்க்கையின் எல்லாச் செயற்பாடுகளிலும் இறைவனுக்கு முதலிடம் கொடுத்தல்.
- ✝ இறைவார்த்தைக்கு முதலிடம் கொடுத்து அதனை தினமும் வாசித்து தியானித்தல்.
- ✝ தூயோர் பிறருக்கு உதவ முன்வருவதைப்போல் நாமும் பிறருக்கு உதவி செய்ய முன்வருதல் வேண்டும்.
- ✝ தூயோரின் வாழ்க்கை வரலாறுகளை வாசித்து அவற்றை எம் வாழ்விற்கு முன்மாதிரியாகக் கொள்ளல்.

✝ தூயோர் இறைத்திட்டத்திற்கு ஏற்ப வாழ்ந்ததைப்போல் நாமும் வாழ முயற்சிக்க வேண்டும்.

✝ உமது ஆலயப் புனிதரின் திருவிழாவின் போது நடைபெறும் நவநாட்களிலும் திருப்பலியிலும் முழுமையாகப் பங்குகொள்ளல்.

**செயற்பாடு**

1. புனிதர்களின் பக்தி தொடர்பான கருத்துக்களை உள்ளடக்கிய உரையாடல் ஒன்றைத் தயாரிக்குக.

2. நீர் விரும்பிய புனிதர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றின் சாரம்சத்தை எழுதுக.

3. அப்புனிதரின் வாழ்விலிருந்து பின்பற்றக்கூடிய முன்மாதிரிகைகள் மூன்று தருக.

**வாழ்க்கைக்கு**

தூயோரின் வாழ்வைப் பின்பற்றுவோம்.

# 20 இறைவனின் திருப்பெயரை மாட்சிப்படுத்தல்

*உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே; ஏனெனில், தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் தண்டியாது விடார்.*

(விப. 20:7)

இப்பகுதியை வாசித்து சிறிது நேரம் தியானியுங்கள். இதில் கூறப்படும் விடயம் தொடர்பாகச் சிந்தியுங்கள்.

இறைவன் அதி பரிசுத்தமானவர். தம்மில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு தமது பெயரை வெளிப்படுத்தினார். இறைவனின் திருப்பெயர் மிகவும் புனிதமானதாகும். எனவே அவரது திருப்பெயரை மரியாதையாகப் பயன்படுத்துதல் வேண்டும். ஆசீர்வாதம், புகழ்ச்சி, மன்றாட்டு அல்லது இறைவனை மகிமைப்படுத்துதல் என்பவற்றைத் தவிர தேவையற்ற விதமாக அவரது திருப்பெயரை உச்சரிக்கக் கூடாது.

பத்துக் கட்டளைகளில் இரண்டாவது கட்டளை இறைவனின் திருப்பெயரை வீணாகச் சொல்லாதிருப்பது என்பதை வெளிப்படுத்துகின்றது. இறைவனின் திருப்பெயரை உச்சரிக்கும் போது பக்தி மரியாதையுடன் உச்சரிக்க வேண்டும்.

**பழைய ஏற்பாட்டின் படிப்பினைகள்**

*உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கே அஞ்சுங்கள்; அவருக்கே பணிபுரிந்து அவரைப் பற்றிக்கொள்ளுங்கள். அவர் பெயராலே ஆணையிடுங்கள்.*

(இச. 10:20)

அரசரோ கடவுளை நினைத்துக் களிகூர்வார்; அவர்மேல் ஆணையிட்டுக் கூறுவோர் அனைவரும் பெருமிதம் கொள்வர்; பொய் சொல்வோரின் வாய் அடைக்கப்படும்.

(திபா. 63:11)

மேற்கூறப்பட்ட திருவிவிலியப் பகுதிகளிலிருந்து பழைய ஏற்பாட்டில் ஆணையிடுதல் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் செயலாகக் காணப்படுகிறது.

## கிறிஸ்துவின் படிப்பினைகள்

ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின் மேலும் ஆணையிட வேண்டாம்; ஏனென்றால் அது கடவுளின் அரியணை.
மண்ணுலகின் மேலும் வேண்டாம்; ஏனெனில் அது அவரின் கால்மணை.
எருசலேம் மேலும் வேண்டாம்; ஏனெனில் அது பேரரசரின் நகரம்.

உங்கள் தலைமுடியின் மேலும் ஆணையிட வேண்டாம்; ஏனெனில் உங்கள் தலைமுடி ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ கறுப்பாக்கவோ உங்களால் இயலாது.
ஆகவே நீங்கள் பேசும்போது 'ஆம்' என்றால் 'ஆம்' எனவும் 'இல்லை' என்றால் 'இல்லை' எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது.

(மத்.5:34 - 37)

மேற்குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதியின்படி இயேசுகிறிஸ்து ஆணையிடுதல் அல்லது சத்தியம் செய்தலை முற்றாக வெறுக்கிறார் என்பது தெளிவாகின்றது.

## தூய பவுலின் படிப்பினைகள்

> என் உயிரின் மேல் ஆணையாகச் சொல்கிறேன்; உங்களை வருத்தத்துக்கு உள்ளாக்காமல் இருக்கவே இதுவரை நான் கொரிந்துக்கு வரவில்லை. கடவுளே இதற்குச் சாட்சி. (2கொரி. 1:23)

> நான் உங்களுக்கு எழுதுவதில் பொய் ஒன்றுமில்லை; இதற்குக் கடவுளே சாட்சி!
>
> (கலா. 1:20)

தூய பவுல் சத்தியம் செய்வதை அனுமதிக்கின்றார், என்பது மேற்குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதியில் காணப்படுகின்றது.

## தூய திருச்சபையின் படிப்பினைகள்

நீதியின் முன் ஒருவர் தான் சொல்வது உண்மையென அறிந்திருந்தால் அச்சந்தர்ப்பத்தில் சத்தியம் செய்ய முடியும். ஆகவே கனமான ஒரு விடயத்தில் ஆணையிட முடியுமென திருச்சபை கற்பிக்கின்றது. எனவே அவ்வாறான சந்தர்ப்பத்தில் உண்மையை மட்டும் வெளிப்படுத்த வேண்டும். பொய்யான வாக்குறுதிகளைச் செய்யாதிருத்தல் வேண்டும். அவ்வாறு செயற்படுவது இரண்டாம் கட்டளைக்கு எதிரான பாவமாகும்.

பத்துக் கட்டளைகளில் எட்டாவது கட்டளை ''பொய்ச்சாட்சி சொல்லாதிருப் பாயாக'' என்பதாகும். இக்கட்டளைக்கேற்ப பொய் சொல்வது தவிர்க்கப்பட்டுள்ளது. ஏதேனும் ஒன்றின் உண்மை நிலையை அறியாது அது தொடர்பாக சாட்சியம் கூறுவது இறை கட்டளைக்கு எதிரான பாவமாகும்.

## நேர்ச்சை தொடர்பான திருச்சபையின் படிப்பினைகள்

இறைவனை மாட்சிப்படுத்துவதற்காக தம் சொந்த விருப்பின்படி ஒரு செயலைச் செய்ய வாக்குப்பண்ணுவதே நேர்ச்சை எனப்படும். நேர்ச்சை என்னும் சொல்லின் பொருள் சுமையைக் குறைத்தல் அல்லது விடுபடல் என்பதாகும். அதாவது ஒரு சுமையிலிருந்து விடுபடுதல் ஆகும்.

ஆனால் நேர்ச்சை செய்யாதிருந்தால் அது உனக்குப் பாவமாகாது.

(இச. 23:22)

இன்று நேர்ச்சை என்பது இலஞ்சம் கொடுப்பதற்கு ஒப்பாகின்றது. அதாவது 'நீங்கள் ஏதாவது ஒன்றைத் தருவதாயின் நானும் தருவேன்' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நேர்ச்சை இறைவனோடு செய்துகொள்ளும் பண்டமாற்று அல்ல, இறைவனுக்குச் சொந்தமானதை இறைவனுக்குக் கையளிப்பதாகும். தூய்மையான மனநிலையோடு மேற்கொள்ளும் ஒரு செயலாகும். அதாவது நேர்ச்சையை ஒப்புக் கொடுப்பவரின் மனப்பாங்கு இறைவனுக்கு ஏற்புடையதாக இருக்கவேண்டும்.

இறைவன் எமக்குக் கிடைக்கச் செய்த ஒன்றுக்காக தூய உள்ளத்தோடு நன்றிகூறுதல், மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல், புகழ்தல் அல்லது நம்பிக்கையை அறிக்கையிடுதல் ஆகியவற்றுக்காக ஏதேனும் ஒன்றை ஒப்புக்கொடுத்தல் தொடர்பாக சிந்தித்துப் பார்த்தல் அவசியம்.

### இக் கட்டளை தொடர்பாக நாம் கடைப்பிடிக்க வேண்டியவை

- ✝ ஒருவர் கடவுளின் தூய பெயரைப் போற்றும் போதும் புகழும் போதும், மாட்சிப்படுத்தும் போதும் கடவுளின் பெயருக்கு மரியாதை செலுத்துகிறார். கடவுளின் திருப் பெயரை முறையற்ற வழியில் பயன்படுத்துவது தவறாகும்.

- ✝ நாம் பிறருக்கு கொடுக்கும் வாக்குறுதிகளைப் பிரமாணிக்கமாக நிறைவேற்ற வேண்டும்.

## செயற்பாடு

1. விப. 20:7 இன்படி பத்துக் கட்டளைகளில் இரண்டாம் கட்டளையை எழுதுக.

2. 'இறைவனின் திருப்பெயர் புனிதமானது' என்ற தலைப்பின் கீழ் சுவர்ப்பத்திரிகைக்கு ஒரு செய்தி எழுதுக.

## வாழ்க்கைக்கு

இறைவனின் திருப்பெயரைப் பக்தியுடன் உச்சரியுங்கள்.

# 21

# ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாக அனுசரித்தல்

ஆறு நாள்கள் வேலை செய்யலாம். ஏழாம் நாளோ ஓய்வு நாளாகிய ''சாபாத்து''. ''ஆண்டவருக்குப் புனிதமான நாள்...''
(விப. 31:15)

இறைவன் ஆறு நாட்களாக உலகைப் படைத்து ஏழாம் நாள் ஓய்வெடுத்தார். ஆறு நாள் வேலை செய்யும் மனிதனுக்கு ஏழாம் நாள் ஓய்வு நாளாகும். இவ் உலகைப் படைத்து மீட்பைப் பெற்றுத்தந்த இறைதந்தைக்காக அன்றைய தினத்தை செலவழிப்பது எமது கடமையாகும். இறைவனுக்கு ஏற்புடைய நாளாக அன்றைய தினத்தைச் செலவழிப்பதோடு மட்டுமல்லாமல் நற்செயல்களிலும் ஈடுபடவேண்டும்.

எனவே இறைவனின் நாளாகிய ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாக அனுசரிக்கும் முகமாக எமது கலாசார பண்பாடுகளுக்கு அமைவாக அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இறைவனின் நாளாகிய ஞாயிறு தினத்தின் திருப்பலி, திருவழிபாட்டின் ஊற்றும் உச்சியுமாகும்.

யூத பாரம்பரியத்தின்படி ஓய்வுநாளில் மக்கள் செபக்கூடங்களில் ஒன்றுகூடி இறைவார்த்தையைப் பகிர்ந்து கொண்டனர். இயேசுவும் திருத்தூதர்களும் இந்தப் பாரம்பரியத்தை மதித்து செயற்பட்டனர் என புதிய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். (மாற். 6:1 -6)

அத்தினத்தில் கிறிஸ்து உயிர்த்த தினமாகிய ஞாயிறு தினம் தற்போது கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தினமாகும்.

எமது அன்பு நிறைந்த இறைதந்தை தமது வார்த்தையாலும் தம் மகனுடைய திருவுடலாலும் ஊட்டமளித்து வலுப்படுத்துவதற்காக நாம் வரும்வரை காத்திருக்கிறார்.

**ஞாயிறு தினம்**

† இயேசு உயிர்த்த நாளாக இருத்தல். (லூக். 24: 1 - 12)

† உயிர்த்த இயேசு கூடுதலாக காட்சியளித்த நாளாக இருத்தல்.

- மகதலா மரியாவுக்குக் காட்சி கொடுத்தல். (யோவா. 20: 11 - 18)
- திருத்தூதருக்குக் காட்சி கொடுத்தல். (யோவா. 20: 19 - 23)
- தோமாவுக்குக் காட்சி கொடுத்தல். (யோவா. 20: 24 - 29)

† தூய ஆவியின் வருகையாகிய பெந்தக்கோஸ்து திருநாளாக இருத்தல். ( திப. அதி. 2)

பத்துக் கட்டளைகளில் மூன்றாவது கட்டளையாகிய ஓய்வு நாள் பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது.

> ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய். ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள்...
>
> (விப. 20: 8 - 10)

எனவே கத்தோலிக்கராகிய நாம் எமது ஞாயிறு தின இறைவழிபாட்டுக் கடமைகளை ஆண்டவர் முன்னிலையில் நிறைவேற்ற வேண்டும். அதற்கேற்ப ஞாயிறு தினமன்று திருப்பலியில் முழுமையாக பங்கேற்க வேண்டும். அல்லது அதற்கு முன் தினம் நிறைவேற்றப்படும் ஞாயிறு தினத் திருப்பலியில் பங்குபற்றுவதன் மூலம் அக் கடமையை நிறைவேற்றலாம். முழுத் திருப்பலியில் பங்குகொள்ளுதல் என்பது திருப்பலிக்கான வருகைப்பாடல் தொடக்கம் முடிவுப்பாடல் வரை நடைபெறும் முழுவழிபாட்டிலும் பங்குகொள்ளுவதாகும்.

ஞாயிறு தினத் திருப்பலியில் நாம் கட்டாயம் பங்குகொள்ளுதல் வேண்டும். சில வேளைகளில் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருத்தல், நோயாளியைப் பராமரித்தல் போன்ற சந்தர்ப்பங்களில் திருப்பலியில் பங்குகொள்ள முடியாவிட்டால் அது பாவமல்ல. ஆனால் ஞாயிறு தினத் திருப்பலியை வேண்டுமென்றே தவிர்த்துக் கொள்ளும்போது கத்தோலிக்கராகிய நாம் கனமான பாவத்தைக் கட்டிக் கெள்கிறோம். பாடசாலை விடுமுறை காலங்களில் மறைவகுப்பு நடைபெறா திருப்பினும் ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றுவது கட்டாயமாகும். சுற்றுலாக்களில் ஈடுபட்டிருக்கும் போது கூட ஒரு ஆலயத்தில் ஞாயிறு திருப்பலியில் பங்குபற்ற மறந்துவிடக்கூடாது.

உயிர்ப்பின் வெற்றி விழாவாகிய ஞாயிறு திருப்பலியில் கத்தோலிக்கராகிய நாம் பங்குபற்றுவதன் மூலம் கிறிஸ்துவுடனும் திருச்சபையுடனும் ஒன்றித்து விசுவாச உறவில் வளர்ச்சியடைகின்றோம். இறைவனின் புனிதத்தன்மைக்கும் மீட்பின் நம்பிக்கைக்கும் சான்று பகர்ந்து தூய ஆவியின் வழிநடத்துதலில் இறைமக்களாகிய நாம் உறுதிபெறுகின்றோம்.

## ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாக அனுசரிக்க மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள்

† ஞாயிறு தினத்தில் அர்த்தமுள்ள வகையில் திருப்பலியில் முழுமையாகப் பங்குபற்றி நற்கருணை பெறல்.

† அன்றைய நாள் இறைவார்த்தையை வாசித்துத் தியானித்தல்.

† மறைக்கல்வி வகுப்பிற்குச் செல்லுதல்.

† இரக்கச் செயல்களில் ஈடுபடுதல்.

† நோயாளர்களைத் தரிசித்தல்.

† பங்கில் அல்லது கிராமத்தில் நடைபெறும் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு பொதுநன்மைக்காகச் செயற்படுதல்.

† பங்கின் பக்திச் சபைகளில் இணைந்து செயற்படுதல்.

✝ தமது குடும்பத்தினதும் உறவினர்களினர்களினதும் தேவைகளில் உதவுதல்.

இவ்வாறாக ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்ட நாளைப் பரிசுத்தமாக அனுசரித்து இறைவனில் மகிழ்ச்சியை அனுபவித்துக் கொள்வது கத்தோலிக்கராகிய எமது தலையாய கடமையாகும்.

**செயற்பாடு**

1. விப. 31:15 இன்படி ஓய்வுநாள் யாருக்காகக் கடைப்பிடிக்க வேண்டிய நாளாகும்?
2. பத்துக் கட்டளைகளில் மூன்றாவது கட்டளையை எழுதிக் காட்டுங்கள்.
3. கத்தோலிக்கராகிய எமது ஞாயிறுதினக் கடன்திருநாளின் பிரதான கடமை என்ன?
4. ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாக அனுசரிக்க உம்மால் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் ஐந்து எழுதுக.

**வாழ்க்கைக்கு**

ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றி அன்றைய நாளை புனிதமாக்குவோம்.

# 22 திருவழிபாடு

கத்தோலிக்கராகிய நாம் அனைவரும் ஒன்று கூடி முழு உலகின் படைப் பாளராகிய இறைவனுக்குக் கிறிஸ்துவோடு தூய ஆவி வழியாக நிறைவேற்றும் அதி உன்னத ஆராதனை திருவழிபாடாகும்.

''இறை நடுநிலையாளர்'' என்ற சுற்றுமடலின் 20வது எண்ணில் திருத்தந்தை 12வது பயஸ் (பத்திநாதர்) திருவழிபாடு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> திருவழிபாடு கிறிஸ்துவின் குருத்துவ பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை கிறிஸ்துவினூடாக தந்தையாம் இறைவனுக்குச் செலுத்தும் அதிஉன்னத வழிபாடே திருவழிபாடாகும்.

கிறிஸ்துவின் மறையுடல் என்பது திருச்சபையாகும். தூய ஆவி வழியாக திருச்ச பையின் தலை கிறிஸ்து ஆவார். திருமுழுக்குப் பெற்ற அனைவரும் அந்த உடலின் உறுப்புக்களாவர். இந்த உறுப்புக்கள் அனைவரும் தலையாகிய கிறிஸ்துவினால் வழிநடத்தப்படுகின்றனர். அவ்வாறே திருச்சபையின் உறுப்புக்களாகிய எம்மை தலையாகிய கிறிஸ்துவே தூய ஆவி வழியாக வழிநடத்துகிறார். இறைவனுக்கு ஏற்புடையவர்களாக எமது முழு வாழ்வையும் மாற்றிக்கொள்ள கிறிஸ்து எமக்கு அழைப்பு விடுக்கின்றார்.

இரண்டாம் வத்திக்கான் சங்க 'திருவழிபாடு' பற்றிய கொள்கைத் திரட்டு எண் 7 இல் இவ்வாறு கூறுகிறது.

கிறிஸ்துவின் திருப்பணி சார்ந்த அலுவலை செயற்படுத்துவதே திருவழிபாடாகும். கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபை கிறிஸ்துவுக்குள் இறைதந்தைக்கு முழுமையாகவும் பகிரங்கமாகவும் செலுத்தும் ஆராதனையே திருவழிபாடாகும்.

இயேசுகிறிஸ்து தமது பணியின் உச்சமாக விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே கல்வாரியில் நிறைவேற்றிய முழுமையானதும் பகிரங்கமானதும் நிறைவானதுமான நிகழ்வு இறைவனுக்குச் செலுத்திய திருவழிபாடாகும். திருச்ச பையின் அங்கத்தவர்களாகிய நாமும் திருப்பலியினூடாக கிறிஸ்து வழியாக இறைதந்தைக்கு எமது வழிபாடுகளை ஒப்புக்கொடுக்கின்றோம்.

திருவழிபாட்டிற்கு ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் பதம் லிற்றோர்ஜி (liturgy) என்பதாகும். அது 'லிற்றூர்ஜியா' (leitourgia) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததாகும். அது லாஓஸ் (laos), எர்கொன் (ergon) என்ற சொற்களினால் உருவாக்கப்பட்டதொன்றாகும்.

**லாஓஸ்** – மக்களைக் குறிக்கும் பதமாகும்.

**ஏர்கொன்** – வேதனமின்றிச் செய்யும் சேவை அல்லது தொழிலாகும்.

கிரேக்க சமூகத்தில் இவ்வார்த்தைக்கு வெவ்வேறு அர்த்தங்கள் இருந்தன. அதாவது

- தங்கள் தலைவருக்கு வேதனமின்றி அடிமை வேலை செய்வதையும்
- தன் நண்பனுக்கு ஆற்றுகின்ற இரக்கச் செயலையும்
- சமூகத்தில் பிரபுக்களுக்கு ஆற்றுகின்ற அரசகரும செயல்களையும் குறித்து நிற்கின்றன.

ஆகவே கத்தோலிக்கராகிய நாமும் கிறிஸ்துவைப் போல பிறருக்காக எமது முழு வாழ்வையும் உடைத்துப் பகிர்ந்து திருவழிபாடாக மாற்றிக்கொள்ள முன்வருவோமாக.

எனவே நான்

- ✝ பங்கிலும் பாடசாலையிலும் உள்ள பக்திச் சபைகளில் இணைந்து துன்புறுவோருக்கு உதவுவேன்.
- ✝ பிறரின் துன்பங்கள் வேதனைகளின் போது அவர்களுக்கு உதவுவேன்.
- ✝ எனது வாழ்வின் இன்பங்களின்போது மட்டுமல்லாமல் பிறரின் இன்பங்களின் போதும் மகிழ்ச்சி அடைவேன்.
- ✝ பாடசாலையில் துன்புறுவோர் மீதும், ஒடுக்கப்பட்டோர் மீதும் இரக்கம் காட்டுவேன்.
- ✝ என்னிடம் உள்ளவற்றைப் பிறரோடு பகிர்ந்து கொள்வேன்.
- ✝ வழிபாட்டுக்கான முன் ஆயத்தங்களில் ஒத்துழைப்பேன்.

**செயற்பாடு**

1. திருவழிபாடுக் கொள்கைத் திரட்டு எண் இன் படி திருவழிபாடு என்பதனை விளக்குக.
2. திருத்தந்தை 12வது பயஸ் (பத்திநாதர்) திருவழிபாடு பற்றி வெளியிட்ட சுற்றுமடலின் பெயர் என்ன?
3. 'லிற்றூர்ஜியா' என்ற சொல்லை உருவாக்கிய இரு சொற்களையும் தருக.
4. உமது அயலாருக்கு உதவிய சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

**வாழ்க்கைக்கு**

பிறருக்காகத் தியாக வாழ்வு வாழ்ந்து மகிழுங்கள்.

# 23 திருவழிபாட்டின் பிரதான பகுதிகள்

உலகனைத்தையும் படைத்த இறைவனுக்கு நாம் அனைவரும் ஒன்றுகூடி ஒப்புக்கொடுக்கும் வழிபாடே திருவழிபாடு எனக் கற்றுக்கொண்டுள்ளோம். இத்திருவழிபாட்டை மூன்று முக்கிய பகுதிகளாக வகைப்படுத்தலாம்.

1. திருப்பலி
2. அருளடையாளங்கள்
3. திருப்புகழ்மாலை

## திருப்பலி

திருவழிபாட்டின் அதி உன்னதமான முக்கியமான ஒரு பகுதி திருப்பலியாகும். இப்பலியில் பாஸ்கா மறைபொருளை நினைவு கூருகின்றோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் பங்குகொள்ளும் திருப்பலியில் அந்த மேன்மையான பாஸ்கா மறைபொருளின் பங்காளிகளாகின்றோம்.

திருப்பலியின் பிரிவுகள்

1. இறைவார்த்தை வழிபாடு
2. நற்கருணை வழிபாடு என இரண்டு பிரதான பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.



23.1 திருப்பலி நிறைவேற்றப்படல்

### இறைவார்த்தை வழிபாடு

முதல் வாசகம், பதிலுரைப்பாடல், இரண்டாம் வாசகம், அல்லேலூயா ஆர்ப்பரிப்பு, நற்செய்தி முழக்கம், இறைவார்த்தை மூலமாக நல்வாழ்வுக்கான மறையுரை, நம்பிக்கை அறிக்கை, நம்பிக்கையாளரின் மன்றாட்டு ஆகியன இறைவார்த்தை வழிபாட்டுக்குள் உள்ளடங்குகின்றன.

### நற்கருணை வழிபாடு

காணிக்கை ஒப்புக்கொடுத்தல், நற்கருணை மன்றாட்டு, இயேசு கற்பித்த செபம், சமாதானம் கூறுதல், அப்பத்தைப் பிட்குதல், திருவிருந்து என்பவற்றுடன் நிறைவடையும்.

இந்த ஒவ்வொரு படிமுறைகளும் நிறைவேற்றப்படும்போது திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட அடையாளங்கள், மன்றாட்டுக்கள், அதற்குரிய அருட்கருவிகள் என்பவற்றைப் பயன்படுத்த வேண்டும். இந்த அதி உன்னதமான திருவழிபாட்டில் ஞாயிறு தினம் மட்டுமல்ல, கடன்திருநாட்களிலும் ஏனைய நாளாந்த திருப்பலிகளின் போதும் அர்த்தமுள்ள முறையிலும் மரியாதை பக்தி வணக்கத்துடனும் பங்குபற்றுதல் கத்தோலிக்கராகிய எமது கடமையாகும்.



23.2 தேவ நற்கருணை வழங்கல்

## அருளடையாளங்கள்

அருள் அடையாளங்கள் புலன்களுக்கு எட்டக்கூடிய ஆற்றல் மிக்க அருளின் அடையாளங்கள் ஆகும். இவற்றின் வழியாக, அருள் வாழ்வு நமக்கு வழங்கப்படுகிறது. அருள் அடையாளங்கள் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டு, திருச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவை திருமுழுக்கு, ஒப்புரவு, நற்கருணை, உறுதிப்பூசுதல், குருத்துவம்,திருமணம், நோயில்பூசுதல் என்ற ஏழுமாகும். அருள் அடையாளத்தின் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் அடித்தளமாக உள்ளன.

ஆன்மீக ரீதியாகவும் வெளிப்படையான ஆயத்தங்கள் மூலமும் நிறைவேற்றப் படுகின்ற இந்த அருளடையாளங்களின் மூலம் நாம் அருட்கொடைகளைப் பெற்றுக்கொள்கின்றோம். இவ் அருட்கொடைகள் கத்தோலிக்கராகிய எமது வாழ்வை வலிமையடையச் செய்கின்றன.

## திருப்புகழ்மாலை



23.3 திருப்புகழ்மாலை செபிக்கப்படல்

திருச்சபையின் சட்டங்களால் முறைப்படுத்தப்பட்ட திருச்சபையின் பொதுச் செபமே ''திருச்சபையின் திருப்புகழ்மாலை'' எனப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இடைவிடாது செபிக்க வேண்டும் என்ற ஆன்மீக இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த திருப்புகழ் மாலை வழிபாடு கிறிஸ்தவ மரபில் தொடங்கப்பட்டது.

தினமும் குறிப்பிட்ட வேளையில் திருவிவிலிய புகழ்ச்சிப் பாடலுடன் சேர்த்து இறைமக்களால் செலுத்தப்படும் இறைபுகழ்ச்சி இதுவாகும் என அறிமுகப்படுத்தலாம். தினமும் குறிப்பிட்ட வேளைகளில் (காலை, பகல், மாலை, இரவு) இது மேற்கொள்ளப்படுவதால் நாழிகை வழிபாடு அல்லது திருமணி வழிபாடு என்றும் அழைப்பதுண்டு. திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட இப்புகழ்மாலை மூலம் குருக்கள் துறவிகள் மட்டுமல்லாமல் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் இதனைச் செபிக்கும்போது இதன் அருள்வரங்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

எல்லா வேளையும் இறைவனுக்கு உரியதாகையால் எந்த வேளையும் இதனைச் செபிக்கலாம். குருக்கள் துறவிகள் தினமும் இதனைச் செபிப்பார்கள். பொதுநிலையினர் அனைவரும் பொதுவாக திருநாட் திருப்பலிக்கு முதல்நாள் மாலைஆராதனையின் போது ஒன்றுசேர்ந்து செபிப்பர்.

இம்மூன்று திருவழிபாட்டுப் பகுதிகளிலும் கருத்துள்ள முறையில் பங்குபற்ற வேண்டும். திருப்பலியின் ஆரம்பம் முதல் முடிவு வரை அர்த்தமுள்ள முறையில் பங்குகொள்ள வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் குறிப்பிட்ட வயதில் உரிய அறிவுடனும் தகுந்த ஆயத்தத்துடனும் அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கவேண்டும். மேலும் இவ்வுலகனைத்தையும் படைத்த இறைவனுக்கு திருப்புகழ்மாலை வழியாக தினமும் புகழ்பாட எம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

அது மட்டுமன்றி உலகினைப் படைத்த இறை தந்தைக்குத் திருப்புகழ் மாலை மூலம் தினமும் நன்றிப் புகழ்பாட வேண்டும். அவ்வாறு செய்ய முடியாத போது பங்கில் மாலை ஆராதனை நடைபெறும் சந்தர்ப்பங்களில் அதில் பங்கு பற்றுவதன் மூலம் மாலைத் திருப்புகழ் மாலையில் நாம் இணைந்து கொள்ள முடியும். இவ்வாறு திருவழிபாட்டு ஆராதனைகளில் பங்குபற்றி இறைவனுக்கு நமது நன்றியையும் புகழ்ச்சியையும் செலுத்த எம்மைத் தினமும் அர்ப்பணிப்போம்.

## செயற்பாடு

1. திருவழிபாட்டில் எத்தனை பிரிவுகளுண்டு?
2. திருவழிபாட்டில் பிரதான பிரிவுகளைப் பெயரிட்டு அதில் ஒரு பிரிவை சுருக்கமாக விளக்குக.
3. திருவழிபாட்டுப் பிரிவுகளில் கருத்துள்ள முறையில் பங்குபற்ற உம்மால் செய்யக்கூடிய 5 செயல்களை எழுதுக.

## வாழ்க்கைக்கு

குறிப்பிட்ட வயதில் குறிப்பிட்ட அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.

# 24

# திருப்பலி

**பாடல்**

ஆலயபீடம் வாருங்கள் இறைமக்களே
ஆண்டவன் சந்நிதி சேருங்கள் இறைகுலமே
மனத்தாங்கல்களோடு அல்ல
மன மாற்றங்களோடு செல்ல (2)
சமபந்தி விருந்தில் சங்கமிப்போம்.

வாழ்க்கையும் வழிபாடும் இணைந்திடவே
வார்த்தையை வாழ்வாய் அமைத்திடுவோம்
நிறைவாய் பெறுவதே அருளென்போம்
இருப்பதைப் பகிர்வதே சமமென்போம்
நல்வாழ்வே ஆன்மீக வழிபாடு - இந்த
திருப்பலி அதற்கோர் ஏற்பாடு

இறைவார்த்தை நெறியே உண்மை வழி
இதயத்தைத் தேற்றும் இன்ப மொழி
தன்னையே தருகின்ற தலைவன் வழி
பகிர்வில் உயர்வு காணும் நெறி - இந்த
உண்மையை நாளும் உணர்ந்திடவே - இந்த
திருப்பலி அதற்கோர் ஏற்பாடு பணியை
ஏற்கும் பெருநாள் (2)

1. *இப் பாடல் எச் சந்தர்ப்பத்தில் பாடப்படுகிறது?*

2. *இப் பாடலின் மூலம் எமக்கு விடுக்கப்படும் அழைப்பு யாது?*

3. *அந்த அழைப்பின் மூலம் நீர் அளிக்கும் பதில் யாது?*

கிறிஸ்தவ வாழ்வின் மையம் திருப்பலி ஆகும். அன்று இயேசுகிறிஸ்து கல்வாரியில் இறைவனுக்கு ஒப்புக்கொடுத்த பலியை இன்று அருளடையாளமாக அதி உன்னத முறையில் நினைவுபடுத்துகின்றோம். இந்த சிறப்பான நிகழ்வில் பங்குகொண்டு நாமும் சிலுவைப் பலியில் பங்குதாரர் ஆகின்றோம். இதன் வழியாக இறைவனுக்கும் எமக்கும் இடையிலான உறவு கட்டியெழுப்பப்படுகின்றது.

திருப்பலி பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. அதைப் பற்றிய அறிவைப் பெற்று செயற்படுவதன் மூலம் திருப்பலியில் அர்த்தமுள்ள முறையில் பங்கேற்க முடியும். எனவே அந்தப் பிரிவுகள் தொடர்பாக இப் பாடத்தின் மூலம் கற்றுக் கொள்வோம்.

## திருப்பலியின் முக்கிய பிரிவுகள்

1. ஆரம்பச் சடங்கு
2. இறைவார்த்தைச் சடங்கு
3. திருப்பீடத்தை ஆயத்தம் செய்யும் சடங்கு
4. நற்கருணைச் சடங்கு
5. மறைத்தூதுப் பணிக்கு அனுப்பும் சடங்கு

## 1. ஆரம்பச் சடங்கு

வருகைப் பாடலுடன் ஆரம்பமாகும் இப்பகுதி மேலும் பல உப பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.



24.1 தொடக்கச் சடங்கு

1. வருகைப் பாடலும் பவனியும்
2. வாழ்த்து
3. முன்னுரை
4. பாவ மன்னிப்புச் செபம்
5. ஆண்டவரே இரக்கமாயிரும்
6. வானவர் கீதம்
7. சபை மன்றாட்டு

## 2.இறை வார்த்தைச் சடங்கு

1. முதல் இறை வார்த்தை முழக்கம் (வாசகம்)
2. பதிலுரைப் பாடல்
3. இரண்டாம் இறை வார்த்தை முழக்கம் (வாசகம்)
4. நற்செய்திக்கு முன் ஆர்ப்பரிப்பு (அல்லேலூயா)
5. நற்செய்தி முழக்கம்
6. மறையுரை
7. நம்பிக்கை அறிக்கை
8. நம்பிக்கையாளரின் மன்றாட்டு



24.2 இறை வார்த்தை முழக்கம்

## 3. திருப்பீடத்தை ஆயத்தம் செய்யும் சடங்கு

காணிக்கைப் பவனியுடன் இப் பகுதி ஆரம்பமாகும்.

1. காணிக்கைப் பவனியும் காணிக்கை ஒப்புக் கொடுத்தலும்.
2. காணிக்கையின் மீது மன்றாட்டு.



24.3 காணிக்கைப் பவனி

## 4. நற்கருணைச் சடங்கு



24.4 நற்கருணை ஆண்டவரை பெறுதல்

1. நற்கருணை மன்றாட்டு
2. இயேசு கற்பித்த செபம், சமாதானம் கூறுதல், அப்பம் பிட்குதல்
3. திருவிருந்து
4. திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு

5. **மறைத்தூதுப் பணிக்கு அனுப்பும் சடங்கு**

உளமாற்றத்துடன் இறைவார்த்தைக்குச் செவிமடுத்த நாம் கிறிஸ்துவின் திரு உடலாலும் திரு இரத்தத்தாலும் வலுவூட்டப்படுகின்றோம்.



24.5 மறை தூதுப் பணிக்கு வழியனுப்புதல்

அதனால் இறைவார்த்தைக்கேற்ப எமது வாழ்வை மாற்றி கிறிஸ்துவை எமது வாழ்வின் மூலம் சமுதாயத்துக்குக் கொண்டு செல்ல பணிக்கப்படுகின்றோம். எனவே கிறிஸ்து கூறிய வார்த்தையின்படி வாழ்ந்து எமது வாழ்வு முன் மாதிரிகையின் வாழ்வு மூலம் கிறிஸ்துவை உலகில் வாழ வைக்கும் பெரும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்படுகிறது.

**செயற்பாடு**

1. திருப்பலியின் பிரதான பிரிவுகள் ஐந்தையும் பெயரிடுக.

2. பின்வரும் பிரிவுகள் திருப்பலியின் எந்த வழிபாட்டுப் பகுதிக்குள் அடங்கும் என்பதைக் குறிப்பிடுக.

   i. இறுதி ஆசீர்
   ii. காணிக்கை மீது மன்றாட்டு
   iii. நம்பிக்கை அறிக்கை
   iv. வானவர் கீதம்
   v. நற்கருணை மன்றாட்டு

3. திருப்பலியில் அர்த்தமுள்ள முறையில் பங்குகொள்வதற்கு நீர் மேற்கொள்ளக் கூடிய செயல்கள் மூன்று எழுதுக.

4. அடுத்து வரும் ஞாயிறு வாசகங்களை பங்குத் தந்தையிடம் பெற்று அப் பகுதிகளை திருவிவிலியத்திலிருந்து தேடி வாசித்து பின்வரும் விடயங்களை உள்ளடக்கி சிறு கைந்நூல் தயாரியுங்கள்.

i. திருப்பலிக்கான முன்னுரை

ii. திருப்பலியின் நம்பிக்கையாளரின் மன்றாட்டு

iii. திருப்பலிக்குப் பொருத்தமான பாடல்கள்

**வாழ்க்கைக்கு**

இறைவார்தையாலும் கிறிஸ்துவின் உடலாலும் ஊட்டம்பெற்று; முன்மாதிரியான வாழ்வின் மூலம் கிறிஸ்துவை உலகிற்கு வெளிப்படுத்துங்கள்.

# 25

# பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள்

**எட்மன்** : பாதர்! கிறிஸ்தோபர் ஒரு சிறிய பிரச்சினையை உங்களிடம் கேட்க வேண்டுமாம்.

**குரு** : என்ன பிரச்சினை கிறிஸ்தோபர்?

**கிறிஸ்தோபர்** : பாதர்! எங்கட பாட்டி திருயாத்திரை சென்று வீட்டுக்கு வந்தார். எனக்கு வரவணிக்கம் போட்ட மாலை ஒன்று கொண்டு வந்து தந்தார். உடனே நான் அதனை கழுத்தில் போட எத்தனித்த போது ''வேண்டாம் மகனே, ஆசீர்வதிக்காமல் போட வேண்டாம்'' என்றார். அப்போது எனது அம்மா ''பாட்டி கொண்டுவந்த மரியாவின் சுரூபத்தையும் மாலையையும் ஞாயிற்றுக் கிழமை ஆசீர்வதித்துக் கொள்வோம்'' என்றார். பாதர் ஏன் அவ்வாறு செய்யவேண்டும்?

**குரு** : அருளடையாளங்களைத் தவிர நமது ஆன்மீக வாழ்வினை வளப்படுத்த வேறு பல பொருட்கள் உள்ளன.(உதாரணம் உத்தரியம், வரவணிக்கம், செபமாலை, சுரூபங்கள்) இவற்றை நாம் அருள்குறிகள் என அழைப்போம். இவற்றை நாம் ஆசீர்வதித்த பின்பே பயன்படுத்துவோம். இவை பிற திருவழிபாட்டு கொண்டாட்டங்களின் ஒரு கூறு எனலாம்.

**கிறிஸ்தோபர்** : பாதர்! பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் என்றால் என்ன?

**குரு** : நன்று, நாளை மறைவகுப்பில் இதை நான் சொல்லித் தருகிறேன்.

**கிறிஸ்தோபர்** : நன்றி பாதர்.

அருள்அடையாளங்களுக்குப் புறம்பே கிறிஸ்தவ வாழ்வைப் புனிதப்படுத்தவும், கிறிஸ்தவர் பயன்படுத்தும் எல்லாவற்றையும் அர்ச்சிக்கவும் திருச்சபை பயன்படுத்தும் கருவிகளே அருள் குறிகள் ஆகும்.

இறைவனைப் புகழவும் அவருடைய கொடைகளைப் பெறவும் இறைவேண்டல், இறைவழிபாடு, ஆகியவற்றுடன் தொடர்புடைய நபர்கள், பொருட்களை நேர்ந்தளிக்கும் மந்திரிப்புகள் ஆகியவை பிறதிருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் ஏனைய கூறுகளாகும்.

**விசேட பண்புகள்**

† பொதுவாக ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் பிறதிருவழிபாட்டுக்குக் கொண்டாட்டங்களை நிறைவேற்றுவர்.

† சில சந்தர்ப்பங்களில் பொது நிலையினராலும் இதனை நிறைவேற்ற முடியும்.

† இக் கொண்டாட்டங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட செபங்களும் சடங்குமுறைகளும் பரிந்துரைக்கப்படுகின்றன. (உதாரணம் - தலைமேல் கை வைத்தல், நெற்றியில் சிலுவை அடையாளம் வரைதல், ஆசிநீர் தெளித்தல்)

எமது ஆன்மீக வாழ்வை வளப்படுத்தும் பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களை எமது நாட்டின், கலாசாரம் பண்பாட்டிற்கேற்பவும் நிறைவேற்ற முடியும். இவற்றை நடைமுறைப்படுத்தும் முறைகள் சில உள்ளன.

**ஆசீர்வதித்தல்**

† தனிநபர்களையும் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் பொருட்களையும் ஆசீர்வதித்தல். (துறவிகளின் அர்ப்பணம், திருப்பலிப் பாத்திரங்கள் - இவை நிலைத்திருப்பவை)

#### மரணச்சடங்கு

- கிறிஸ்துவின் இறப்பு - உயிர்ப்பில் கிறிஸ்தவர்களின் இறப்பு அர்த்தம் பெறுகிறது.

- மரணச்சடங்கில் பங்குபற்றுவதன் மூலம் அவரோடு நமக்குள்ள நட்புறவை வெளிப்படுத்துவதோடு அவருடைய ஆன்மாவின் தூய்மைக்காக இறை வேண்டுதல் செய்கிறோம்.

- நிலை வாழ்வின் மட்டில் அங்கு கூடியிருப்போரின் நம்பிக்கையை வலுப்படுத்துதல். இவை திருச்சபையின் பணிகளாகும்.

### திருப்பண்டங்களுக்கு மரியாதை செலுத்துதல்

திருப்பண்டங்கள் புனிதர்களின் நினைவுச் சின்னம். அது புனிதர்களைப் பற்றி அறிந்து கொள்ளச் செய்வது மட்டுமல்லாமல் நமது உண்மைக் கிறிஸ்தவ வாழ்வுக்கு வழிகாட்டுதலும் அளிக்கின்றது.

### வரவணிக்கம்

வரவணிக்கம், உத்தரியம் என்பன அணிதல் ஒரு நல்ல பழக்கமாகும். இது எமது விசுவாசத்தை வெளிப்படுத்தும் செயலாகும். இதன் வழியாக புனிதர்களின் பாதுகாப்புக் கிடைக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

### பக்தி முயற்சிகள்

கிறிஸ்தவர்கள் தனித்தோ பிறரோடு சேர்ந்து குழுவாகவோ மேற்கொள்ளும் செபதப செயல்கள் பக்தி முயற்சிகள் எனப்படும்.

**உதாரணம்** தூயோரின் நவ நாட்கள்
திருப்பயணங்கள்
சிலுவைப்பாதை
செபமாலைப்பக்தி

மேற்குறிப்பிடப்பட்ட பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களின் வழியாக கிறிஸ்தவர்களாகிய நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு தேவையான வரத்தினைக் கேட்டுக் கொள்கின்றோம். கிறிஸ்து வழியாக இறை ஆசீரைப் பெற்றுக் கொள்கின்றோம். எனவே நாம் இவற்றில் பக்தியுடனும் நம்பிக்கையுடனும் பங்குபற்றுதல் சிறப்பானதாகும்.

**செயற்பாடு**

1. பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களின் விசேட பண்புகள் 3 தருக.
2. பிற வழிபாட்டுக் கொண்டாட்டங்களின் கூறுகள் 3 தருக.
3. ‘‘கிறிஸ்தவ வாழ்வைக் கட்டியெழுப்ப பிற திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் உதவும்’’ என்னும் தலைப்பில் சுவரேட்டுக்கான ஆக்கம் ஒன்று தயாரிக்குக.

**வாழ்க்கைக்கு**

திருப்பண்டங்களுக்கு மரியாதை செலுத்தப் பழக்குங்கள்.